எனது ஊர்

# காரை நகர்

www.karaiNEWS.com




உங்கள் அழகிய புன்னகைக்கு



பிரபல பல் வைத்தியர்

Dr. ஆதி கணபதி சோமசுந்தரம்

416.750.9969

2191 Warden Ave., Suite 300, Scarborough



• கனடாவில் இருந்து வெளிவரும் காலாண்டு சஞ்சிகை • வீடுகளுக்கு இலவச விநியோகம் • 416 821 8390 • இதழ் 07








தினசரி விருந்து ஸ்பெசல் விசேட விலைகளில்



திருமண விழாக்கள்
பிறந்தநாள் விழாக்கள்
மற்றும் அனைத்து
விசேட வைபவங்களுக்கும்
அறுசுவை உணவு வகைகளை
ருசித்து மகிழ நாடுங்கள்



அம்மா

TAKE OUT & CATERING

நாவுக்கு ருசி
மனதுக்கு நிறைவு



Tel: 416. 265. 1211 723 Kennedy Rd (Kennedy & Eglinton)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓயாது உழைத்து
ஓடாகத் தேயும்
உங்களுக்கு
ஒதுங்க ஒரு வீடு
வேண்டாமா?



BEAUTY OF
REALESTATE



## V.T.C.Ranjson

Sales Representative

*...to find the right neighbourhood*

IMAGINE: Your own Home! Fully yard with safety for your kids. Park your car and walk to the house. Enough room and comfortable space for your personal and family life. All on a quiet neighbourhood, Privacy.

Do Not Sign Another Rent Check.
Stop Making Your Landlord rich.

**I Can Help YOU!**

Buy and Own Your Own Home,
**Right Now.**
(every month you wait you are flushing your hard earned money right down the toilet)

- Mortage arrangements.
- Lawyer's with low fees.
- Professional Certified Home Inspectors with full report on your hand.
- On time mover's with no damage or loss.

*Call me at* **647.406.6352 (24/7)**

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife/Future Realty Inc., Brokerage***
*Independently Owned and Operated REALTOR*
262 Markham Road,
Scarborough, ON. M1J 3C5
Tel: 416.264.0101
Cell: 647-406-6352
Fax: 416.261.1519
ranjson@rogers.com



Century 21
LEADING EDGE REALTY INC
BROKERAGE


உங்கள் கனவு இல்லத்தை
பெற்றுக்கொள்ளவும்
அதற்கான முதலீட்டு ஆலோசனைகளை
பெற்றுக்கொள்ளவும்
நம்பிக்கையான ஒரே முகவர்



RJ **FINANCIAL PROTECTORS**
ALL INSURANCE AND MORTGAGE NEEDS

**RITA JETHI**
Sales Representative &
Financial Advisor

85 Nashdene Dr. Unit 26
Scarborough, Ontario
Cell: 416 841 2584
Office: 416 293 3411
Fax: 416 293 9505
rita_jehti@hotmail.com



## மு.காசிப்பிள்ளை சக புத்திரர்கள்

16 வருடங்களாக துரித பணமாற்று சேவையில்
கனடா வாழ் தமிழ் மக்களின் மனதில்
நம்பிக்கை, நாணயம், நன்மதிப்பை
பெற்ற ஒரே ஸ்தாபனம்

**கல்லெல்லாம் மாணிக்க கல்லாகுமா...!**




**M.KASIPPILLAI & SONS INC**

**Tel: 416 267 8221**
3228 Eglinton Ave. E, Suite #3 Scarborough, Ont. M1J 2H6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துச் சிதம்பரம்
# திருவெம்பாவை உற்சவம் 2009





தேர்த்திருவிழா ஜனவரி 10.2009










6ம்.7ம் திருவிழா





இச்சஞ்சிகை கனடாவில் இருந்து ஜனவரி 10.2009 அன்று ஆருத்திரா தரிசனத்தன்று வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி இரைச்சல் இல்லை.... தூரம் ஒரு தடையுமில்லை

# இப்போது உலகெங்கிலும் தமிழ் வானொலிகளைக் கேட்கமுடியும்

மணியின் Palmyra வானொலியினூடாக எங்கிருந்தும் தமிழ் வானொலிகளை மிகத்துல்லியமாக கேட்க முடியும். இங்கிலாந்திலிருந்த படி ரொறன்ரோ வானொலிகளையும், ரொறன்ரோவிலிருந்தபடி தமிழக வானொலிகளையும் கேட்கலாம். ஆச்சரியம் ஆனால் உண்மை.

- Mani Digital Wireless and LAN internet radio
- LCD display
- Listen to 10,000 radio stations from around the world
- Select stations by county or musical genre or by favorite
- Works with any wireless internet connection (802.11b and 802.11g compatible) and Wired Connection (LAN)
- Supports MP3, real audio, windows media audio, AAC and OGG format playbacks
- Built-in Wi-Fi antenna
- With USB host port
- Time and date display
- With clock and alarm functions
- 3 presets for favorite stations on unit
- Full function IR remote control
- Also can be used as media player




MANI
*a life style*

**Mani National Corporation**
**416-570-1990**
**www.maninational.com**

உங்கள் அபிமான வானொலி நிலையங்களிலும், தமிழ் வணிக நிலையங்களிலும் கிடைக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது ஊர் காரை நகர்

## இனி ஒரு விதி செய்வோம்!

தேடிச் சோறு நிதம் தின்று - பலசின்னஞ்சிறு கதைகள் பேசி - மனம்வாடி துன்பம் மிக உழன்று -பிறர்வாட பலசெயல்கள் செய்து -நரைகூடி கிழப்பருவம் எய்தி - கொடுங் கூற்றுக்கு இரையெனப் பின்மாயும் - பல வேடிக்கை மனிதரைப் போல் - நாமும் வீழாமல்

இடம் பெயர்ந்த நாடுகளில் நாம் தனித்தனியாக தனித்து விடப்பட்ட நிலையிலும் ஊரின் பெயரால் மீண்டும் நாம் ஒருவரை ஒருவர் அறிந்து கொண்டோம். ஆனாலும் இடம் பெயர்ந்த நாட்டு சூழ்நிலைகளுக்குள் நாம் எம்மையும் அறியாது மூழ்கிக் கொண்டு செல்கின்றோம். ஆகவே எமக்கு எல்லாம் பொதுவான நாம் வாழ்ந்த எமது மண்ணின் பெயரால் வேற்றுமைகளை கழைந்து இன்றே ஒன்றுபடுவோம்.

இடம் பெயர்ந்த சூழ்நிலைக்குள் அகப்பட்டு நாம் பிறந்து வளர்ந்த மண்ணையும் மக்களையும் ஆசை மோகத்தால் நாம் மறந்து வாழ முற்படுகின்றோம். காரைநகர் மண்ணில் பிறந்த பல ஆயிரக்கணக்கான மக்கள் கனடாவில் வாழ்ந்து வந்தாலும் அவ்வப்போது கூட சிற்சிறிய உதவிகளை எமது மண்ணிற்கு வளங்க முடியாத சூழ்நிலையே நிலவி வருகின்றது.

இடம்பெயர்ந்த நாடுகளில் வசதியாக வாழ்ந்து வந்தாலும், ஊருக்கும் ஊர் மக்களிற்கும் உதவ மனம் இல்லாதவர்களாக வாழ இடம்பெயர்ந்த நாடுகள், அவர்களது பொருளாதார நிலமைக்குள் எம்மை கட்டிப்போட்டு வைத்திருக்கின்றது.

வசதியாக வாழ்வதாகவும், ஆடம்பரமாக வாழ்வதாகவும், பன்னீரில் கொப்பளித்து. பாலில் முகம் கழுவி, பஞ்சாமிர்தம் சாப்பிட்டு வளர்வதாக நினைக்கும் நாம் ஊரின் அபிவிருத்திக்காகவும் ஊரின் அடிப்படை தேவைக்காவும் வெறும் பத்து டொலர் கேட்டால் "வசதியில்லை" என்ற வார்த்தையை வெட்கம் இன்றி சொல்கின்ற நிலையிலேயே இருக்கின்றோம்.

இதுவரை ஏமாந்து போனது எமது ஊர். "ஏன் பிறந்தாய் மகனே ஏன் பிறந்தாய்" எமது காரைநகர் மண்ணில் ஏன் பிறந்தாய்? ஆடம்பர வாழ்க்கைக்கு அடிமைப்பட்டு ஆயிரக் கணக்கில் அநாவசியமாக செலவு செய்யும் எங்களையும் காரை மண் சுமந்த பாவத்தை எங்கு சென்று ஆற்றுமோ எமது மண். ஆடம்பர வாழ்க்கையும் அநாவசிய செலவும் அர்த்தமற்ற வாழ்க்கையும் நிம்மதியை தரப்போவதில்லையென எப்போது நாம் அறிந்து கொள்வோம்! அதுவரை எமது மண் எம்மை சுமந்தது போலவே இன்னும் பலரையும் சுமந்த வண்ணம் காத்திருக்கும்.



தொகுப்பாளர்.

## உள்ளே...

**காரைநகர் செய்திகள்-**


மணற்காட்டில் மகேஸ்வரன் அறப்பணி நிலையம்.
காரைநகர் இந்துக் கல்லூரிக்கு புதிய அதிபர்

காரைநகர் அபிவிருத்தி சபை புதிய நிர்வாகம்

காரைநகரில் மகேஸ்வரன் நினைவு நாளில் பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர்

நிசாவின் சீற்றம்

ஈழத்து சிதம்பரம் துரித திருப்பணி

காரைநகர் கல்விச் செயற்பாட்டில் சமூகத்தின் பங்கு
-கலாநிதி ஜெயலட்சுமி இராசநாயகம்

சமய சமூகப்பணிகளில் ஈடுபட்டுவரும் ஓய்வு பெற்ற அதிபர் கதிரவேலு தில்லையம்பலம்.

கமநல சேவைகள் நிலையமும் அதன் செயற்பாடுகளும்.

காரைநகர் பாடசாலைகளில் கற்பித்தல் செயற்பாடுகள்
- ஒரு ஆய்வு
-முன்னாள் அதிபர் அ.கமலாகரன்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 2006க்கு பின்னர் காரைநகர் குடிசனத் தொகையும் மக்களின் வாழ்வு நிலையும்

2006ஆம் ஆண்டு குடிசன விபரப்படி காரைநகரில் இருந்த 10874 பேரில் 5189 ஆண்களும் 5684 பெண்களும் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தில் எல்லா பிரிவுகளிலும் ஆண்களில் பார்க்க பெண்களே கூடதலாக இருக்கின்றனர். காரைநகரில் 645 பெண்கள் விதவைகளாக இருக்கின்றனர். இத் தொகையில் 387 பெண்களின் கணவன்மார்கள் வன்செயல், விபத்து, இயற்கை அனர்த்தம், தற்கொலை போன்றவற்றால் மரணித்தவர்கள். குழந்தைகளுள் 30 பேர் வலது குறைந்தவர்களாகவும், 20 குழந்தைகள் மன நோயாளிகள் எனவும் அறிய வருகின்றது. குழந்தைகளுள் 275 பேர் தந்தையை இழந்துள்ளனர். 79 பேர் தாயை இழந்துள்ளனர்.

காரைநகரில் 60 வயதுக்கு மேற்பட்ட 1544 பேர் இருப்பதாகவும் கணிக்கப்பட்டுள்ளது. மொத்த குடிசனத் தொகையில் இது ஏறக் குறைய 14 விகிதமாகும். காரைநகரில் சராசரி குடிசன அடர்த்தி சதுர கிலோ மீற்றருக்கு 510 பேராக இருக்கின்றது. மேலும் இங்கிருக்கும் 3421 குடும்பங்களில் 3386 குடும்பங்கள் இந்துக்களாகவும், 35 குடும்பங்கள் கிறிஸ்தவ சமயத்தை பின்பற்றுபவர்களாக இருக்கின்றனர். இங்கு 64 இந்துக் கோயில்களும் 2 கிறிஸ்தவ தேவாலயங்களும் இருக்கின்றன. இந்து சமய சடங்குகள், விழாக்கள் இங்கு மிகவும் இறுக்கமாக கடைப்பிடிக்கப்படுவதுடன் என்றும் நெற்றியில் திருநீறு அணிந்தவர்களாக காட்சி தருவர். கரைநகரின் மக்கள் தொழில் அடிப்படையில் நோக்கின் அரச சேவையில் 155 பேரும், கூட்டுறவு ஊழியர்கள் 44 பேரும், விவசாயிகள் 590, மீனவர்கள் 1159, தனியார் துறை ஊழியர்கள் 50, மேசன் 79, ஆசாரி 50 ஏனைய தொழில்கள் 925 பேராக மொத்தம் 3080 பேர் தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். மேலும் 133 ஓய்வூதியர்கள் உள்ளனர்.

காரைநகர் எவ்வாறு அபிவிருத்தி செய்வதென்பது மிகவும் சிக்கலாக இருக்கின்றது. இப் பகுதியில் பணம் படைத்த, தொழில் செய்யக் கூடிய ஆற்றல் மிக்கவர்கள் இருந்தாலும் காரைநகரில் தொழில்களை மேற்கொள்ளக் கூடிய வாய்ப்புக்கள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டு இருக்கின்றன. பெரிய, சிறிய கைத்தொழில்கள் இடவமைவு செய்வதற்கு இடவமைவுக் காரணிகள் சாதகமாக அமையவில்லை. இதனால் நலிந்த பிரிவினரை மையமாகக் கொண்ட வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய தேவை உள்ளது.

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 1087 குடும்பங்கள் உலர் உணவு நிவாரணம் பெறுகின்றனர்.

காரைநகரில் ஒரு பக்கம் செல்வம் படைத்தவர்கள் இருக்கின்ற பொழுது வறுமைக்குட்பட்டவர்களின் எண்ணிக்கையும் குறிப்பிடத்தக்கது. சமுர்த்தி திட்டம் இங்கு முன்னெடுக்கப்படுகின்றது. ஒரு சமுர்த்தி வங்கியும் 37 சமுர்த்தி சபைகளும், 379 சிறு குழுக்களும், செயல்படுகின்றனர். சமுர்த்தி செயற்பாடுகள் நல்ல முறையில் முன்னெடுக்கப்படுமாயின் குறிப்பாக நலிந்த பிரிவினர் சமூக பொருளாதார மேம்பாட்டை துரிதப்படுத்த முடியும்.

தகவல்: ஆய்வு அறிக்கை(2008) இல் இருந்து ஒரு பகுதி.
பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை

**வாரிவளவு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் பிள்ளையார் பெருங்கதை நிறைவு நாளில் கஜமுக சங்காரம் சிறப்பாக இடம்பெற்றது(ஜனவரி 01,2009)**









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## THOMAS PARALEGAL INC

கனடா பாராளுமன்ற முதல் தமிழ் வேட்பாளர், ரொறன்ரோ மாநகர சபை உறுப்பினருக்கான வேட்பாளர், அகில உலக தன்னார்வத் தொண்டு விருது பெற்றவர் அத்துடன் அரசியல்வாதிகள், அரசாங்கப் பணியாளர்கள், சமய உயர் அதிகாரிகளுடனும் மிகவும் துல்லியமாகப் பணிகளில் ஈடுபட்டு ஏனைய சட்டத்தரணிகளுடன் இணைந்து உங்களின் காரியங்களை நியமாக்கித் தருபவர்.



**DAVID THOMA**
(Certufied Paralegal Consultant)

Immigration
Small Clims Court
Landlord Tenant
Separation Settlement
Corporation Regulations
Foreign Medical Tour Arrangement
Marriage Arrangement (Come Directly)
Traffic Tickets - We win or its free

Translation : Tamil
Malayalam, Urdu and Hindi
Accident Claims Bankruptcy / Proposal Settlement
Human Rights
Mortgage
Quick Pardon
Joh placement

*My team experience Integrity and Sound Advice will get you through*
**Call Us Tel: 416 752 6999 Fax: 647 435 3367**
*email - dtparalegal@yahoo.ca*
*2390 Eglinton Ave. E., Suite # 230 Scarborugh, ON MIK 2P5*



# Image Colony

*For All Your Photography Needs*

**Please Call: Mayu** (fhiu kf;fspd; ez;gd;)
CELL: 647 294 3499
PHONE: 905 237 1860
EMAIL: IMAGECOLONY@GMAIL.COM



352 Redstibe Road, Richmond Hill, ON. L4S 2V7



# A B B Y ' S
## CONSTRUCTION INC
ESSENTIAL HOME SERVICES

- Complete basement
- Home Theater
- Bar
- Home remodeling
- Bathrooms
- Kitchen
- Cabins
- Counter tops
- Crown Moldings
- Trim works
- Floring Harwood
- Laminate and Tiles
- Deck and Additions

www.abby.ca
Phone: 905 706 4447
Email: siva@abby.ca
Fax: 905 665 9090

235 Whiby Shores Greenwa5 Whitby. ON. L1N 9N9









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகரின் கல்விச் செயற்பாட்டில் சமூகத்தின் பங்களிப்பு.

கலாநிதி திருமதி ஜெயலட்சுமி இராசநாயகம்
(சிரேஸ்ரவிரிவுரையாளர் யாழ் பல்கலைக் கழகம்)



ஒரு சமூகத்தின் சீர்திருத்தத்திற்கும், அதன் முன்னேற்றத்திற்கும் உதவுவது கல்விச் செயற்பாடுகளாகும். எனவே ஒரு சமூகமானது தனது தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கு அது பாடசாலைகளின் செயற்பாடுகளுக்குத் தனது பூரண ஆதரவினை வழங்கு வதற்கு எக் காலத்திலும் தயாராக இருத்தல் வேண்டும். சமூக விழுமிய ங்களை கட்டியெழுப்பும் பாரிய பொறுப் பும் பாடசாலையினூடாக வளர்க்கப்பட வேண்டும்.

இவ் வகையில் யாழ்ப்பாண மாவட்டத்தின் பிரதான பகுதியாக விளங்கும் காரைநகர் பிரதேசத்தின் பாடசாலைகள் பாரிய சமூகப் பணியினை ஆற்றி வருகின்றன. பாடசாலைகளின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள் போன்றவற்றின் பங்களிப்பு அதிகமானதாகும். அத்துடன் பழைய மாணவர் சமூகம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் போன்ற நிறுவனங்கள் பாரிய பங்களிப்பு ஆற்றி வருவது குறிப்பிடத்தக்கதாகும். காரைநகரில் இருந்து உலகில் பல பாகங்களிலும் புலம் பெயர்ந்து வாழும் பழைய மாணவர் சங்கம் நகரின் அபிவிருத்திக்கென பெருந்தொகையான பணத்தினை அன்பளிப்புச் செய்தமை பெரியதொரு விடயமாகும்.

நாட்டின் கல்வி வளர்ச்சியில் அத்திவாரமாக அமைவது ஆரம்பக் கல்வி நடவடிக்கைகளாகும். இதனால் அதன் வளர்ச்சிக்கும் விருத்திக்குமான பெரும் பங்களிப்பினை வழங்குகின்ற இந்த அமைப்பின் பணிகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். கல்விப் பாரம்பரியம் ஒன்றினை தன்னுள்ளே கொண்டு விளங்கும் காரைநகர் பிரதேசத்தின் கல்வி வரலாறு பெருமையானது. பல அறிஞர்களையும் கல்விமான்களையும், கவிஞர்களையும், தனவந்தர்களையும், அரசியல் பிரமுகர்களையும், உருவாக்கிய காரைநகரின் பெருமை தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். எனினும் அண்மைக்கால போர் நடவடிக்கைகள் இப் பிரதேசத்தின் கல்விச் செயற்பாடுகளைச் சீர் குலைத்ததுடன் அதன் முன்னேற்றத்திற்கும் தடையாய் அமைந்துள்ளன. எனினும் கல்வி நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்க அளவு மேற்கொள்ளப்பட்ட போதிலும் ஒப்பீட்டளவில் சிறிது குறைவாகவே இருந்த நிலையும் பின்பு அண்மைக்கால பரீட்சை முடிவுகள் நிறைவைத் தந்துள்ளமையும் கல்வி வரலாற்றின் சாதனைகளாகும்.

காரைநகர்ப் பிரதேசத்தின் பரந்த நிலப்பரப்பில் 1AB பாடசாலைகள், வகை II, வகை III பாடசாலைகள் உட்பட மொத்தம் 08 பாடசாலைகள் இயங்கி வருவது குறிப்பிடத்தக்க அம்சமாகும். நாட்டில் நடைபெறும் பாரிய யுத்தத்தின் பின்னனியிலும் இன்றும் இப்பாடசாலைகள் இயங்கி வருவது சிறப்பான அம்சமாகும். இங்கு மாணவரின் கல்வி நிலை குறிப்பிடத்தக்க அளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளது. எனினும் முழுமையான அளவிற்கு கல்வி நோக்கங்களை அடைவதற்கு பாடசாலைகள் பல்வேறு வகையான நெருக்கடிகளை அனுபவித்து வருகின்றன. போதியளவு வளங்கள் அங்கு காணப்படவில்லை. இவற்றிற்கு பல காரணிகள் தடையாக அமைகின்றன.

சீரான போக்குவரத்து வசதியின்மை

நாட்டின் போர்க் காலச் சூழல்

மக்களின் இடப்பெயர்வுகள்

மக்களின் வறுமை நிலை

பாடசாலைகளில் போதியளவு ஆசிரியர் பற்றாக்குறை

போதியளவு தளபாட வசதியின்மை

மாணவர்கள் நகரப்பகுதிப் பாடசாலைகளில் கற்பதற்கு விரும்புதல்.

பேற்றோரின் கல்வி பற்றிய விழிப்புனர்வின்மை.

சிறுபிள்ளைகளின் உழைப்பை நம்பியிருக்கும் பெற்றோர் செயற்பாடுகள்.

பாடசாலைகளின் கலைத்திட்ட அமைப்பு சமூகத்தோடு பொருந்திப் போகாமை.

சமூக விழிப்புனர்வின்மை

மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள ஒரு வித அச்சஉணர்வு.

இத்தகைய பல்வேறு நெருக்கடி நிலைகளை இக் கிராமம் அனுபவித்து வருகின்ற போதிலும் பாடசாலை நிர்வாகம் சிறப்பாக அமைவதன் காரணமாக அவை ஓரளவு தானும் இயங்கும் நிலையைக் கானமுடிகின்றது. இங்கு காரைநகர் கிழக்கில் உள்ள Dr. A. தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்தில் 2006ம் ஆண்டு கணக்கெடுப்பின் படி அதிபர் ஒருவரும், பிரதி அதிபர் ஒருவரும் ஆசிரியர்கள் முப்பத்தெட்டு பேரும் மொத்தம் 40 ஆசிரியர்கள் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள். இங்கு ஏறக்குறைய 565 மாணவர்கள் கல்வி பயில்கின்றார்கள்.

அதே போன்று காரைநகர் மேற்கில் அமைந்துள்ள யாழ்ற்றன் கல்லூரியில் அதிபர் ஆசிரியர்கள் உட்பட 38 பேர் கல்வி கற்பிக்கின்றார்கள். இங்கு ஏறக்குறைய 572 மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள். இவ்விரு பாடசாலைகளும் தரம் 1 தொடக்கம் க.பொ.த உயர்தரம் வரை உள்ளடக்கிய பாடசாலைகளாகும். காரைநகர் கிழக்கில் அமைந்துள்ள காரை சுந்தரமூர்த்தி வித்தியாலயத்தில் ஏறக்குறைய 288 மாணவர்களும் அதிபர் உட்பட 17 ஆசிரியர்களும் கல்வி நடவடிக்கைளில் ஈடுபடுகின்றார்கள். இங்கு மாணவர்கள் தொகையோடு ஒப்பிட்டு நோக்கும் போது ஆசிரிய வளம் போதுமானதாக உள்ளது. இதனால் எதிர்காலத்தில் கல்விப் பெறுபேறுகள் மேலும் உயர்வடைவதற்கு அதிக வாய்ப்புக்கள் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைநகர் தென் கிழக்கு J/43 கிராம சேவைகர் பிரிவில் பாலாவோடை இந்து தமிழ் வித்தியாலயம், காரைநகர் தெற்கில் அமைந்துள்ள காரை அமெரிக்கன் மிஷன் தமிழ் மகா வித்தியாலயம், காரைநகர் தென் கிழக்கில் அமைந்துள்ள வியாவில் சைவ வித்தியாலயம், காரை வட கிழக்கில் அமைந்துள்ள காரை மெய்கண்டான் வித்தியாலயம், காரை வட கிழக்கில் அமைந்துள்ள வலந்தலை வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ் மகா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளும் கனிசமான அளவு மாணவர், ஆசிரியர் தொகைகளை உள்ளடக்கிய பாடசாலைகளாகும்.

மொத்தமாக பார்க்கும் போது காரைநகரில் (2006) 1920 மாணவர்களையும் 117 ஆசிரியர்களையும் உள்ளடக்கிய கல்விச் செயற்பாடுகள் சிறப்பாக நடைபெறுகின்றன. உண்மையில் நாட்டின் போர் நெருக்கடியினால் ஏற்பட்ட நிதி நெருக்கடிகளும் இப்பாடசாலைகளையும் விட்டு வைக்காத நிலையிலும் காரைநகர் சமூகத்தின் ஆதரவும் பாடசாலை நிர்வாகத்தின் சிறப்பான செயற்பாடுகளும் பாடசாலையை நடாத்துவதற்கு உதவின எனலாம்.

காரைநகர் சமூகம் தனது தொடர்புகளை பாடசாலையோடு பேணுவதன் மூலம் சமூகத்தின் வளர்ச்சியில் அது கொண்டுள்ள அக்கறையை அறிய முடிகின்றது. எனினும் மக்கள் யாவரும் தமது அடிப்படைத் தேவைகளைக் கூடத் திருப்திகரமாகப் பெறுவது என்பது சில இடங்களில் மிகவும் கடினமாகவேயுள்ளது. இப்பிரதேசத்தின் பொருளாதாரம் பெருமளவு புவியியல் சார் நிலைமைகளினாலேயே தீர்மானிக்கப்படுகின்றது. இங்குள்ள கடல்வளத்தைப் பயன்படுத்தி மீன்பிடித் தொழிலை முழுவதுமாக நம்பிய ஒரு பகுதியினர் கடற்கரையோரம் அண்டிய பகுதிகளிலும், விவசாயம் செய்ய பொருத்தமான நிலப்பகுதியை அண்டிய பகுதியில் வாழும் மக்கள் விவசாயத்தை தம் தொழிலாக கொண்டு வாழும் நிலைமையை காணமுடிகின்றது.

இத்தகைய தொழிலுக்கு உதவியாகத் தம் பிள்ளைகளைப் பயன்படுத்தும் நிலை சில பெற்றோரிடம் உள்ளதால் அவர்கள் கல்வியில் காட்டும் நாட்டம் குறைவடைந்து அவர்களுக்கிடையில் தொழில் நாட்டம் அதிகரித்து வருவதையும் இதனால் கல்வியை இடையில் விட்டு பாடசாலையில் இருந்து இடை விலகும் நிலையையும் காண முடிகின்றது. சில பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் கூட போதிய ஆர்வத்துடன் கற்பதாக தெரியவில்லை. இதற்கு பெற்றோர்களின் அக்கறையின்மைதான் மிக முக்கயமானகாரணமாகத் தென்படுகின்றது. எனினும் இன்றைய சமூகத்தில் யாவர்க்கும் கல்வி "எல்லோரும் கல்வியைப் பெறும் தகுதியுடையவர்கள்" என்ற கோட்பாட்டின் அடிப்படையில் கல்வி பற்றிய விழிப்புணர்வு காரணமாகப் பிள்ளைகளின் கல்வியில் அக்கறை கொண்ட பெற்றோர்கள் உள்ளனர். இதனால் பெற்றோரின் வறுமை நிலையும் கல்வித் தடைக்கு முக்கிய காரணியாக அமைகின்றது எனலாம்.

இன்றைய சூழலில் காரைநகரில் இருந்து புலம் பெயர்ந்து மேலை நாடுகளில் வாழும் உறவுகள் காரைநகர் பிரதேசத்தின், அங்கு வாழும் உறவுகளின் கல்வி மற்றும் சமூக பொருளாதார வளர்ச்சியை நோக்கி தம்மாலியன்ற உதவிகளை வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். இலங்கை நாட்டின் பிரசித்தி பெற்ற காரைநகர் பிரதேசத்தின் எதிர்காத்தின் கல்வி வளர்ச்சிக்கு இத்தகைய செயற்பாடுகள் நிச்சயம் சமூக வளர்ச்சியைக் காட்டும் என்பதில் சந்தேகமில்லை.

ஆகவே இங்குள்ள மக்களின் கல்வி நிலையை மேலும் அதிகரிக்கச் செய்ய வேண்டுமானால் சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

பெற்றோர்களிடத்தில் கல்வி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல்

சிறந்த தொடர்பாடல் வசதிகளை ஏற்படுத்தல்.

ஆசிரியர்களுக்குச் சிறந்த பயிற்சிகளை அளித்தல்.

பெற்றோர்களுக்குச் சிறிய வருமானம் பெறும் வழிகளை ஊக்குவித்தல்.

பாடசாலைகளில் கற்பித்தல் உபகரணங்கள் போதிய தளபாட வசதிகளை ஏற்படுத்தல்.

ஆரம்பக் கல்வி நடவடிக்கைகளில் பெருங் கவனம் செலுத்துதல்.

முதியோர் கல்வித் திட்டங்களை அறிமுகம் செய்தல்.

சிறந்த பாடசாலை முகாமை பற்றிய கருத்தரங்குகளை ஏற்படுத்துதல்.

சமூகத்தோடு பொருந்தும் வகையில் கலைத்திட்ட அமைப்புக்கள் காணப்படல்.

கல்வியில் அதிக அக்கறையுடைய மாணவர்களை ஊக்குவித்தல்

பாடசாலைக்கும் சமூகத்திற்கும் இடையே நெருங்கிய தொடர்பையும் பேணுதல்.

போன்ற செயற்பாடுகள் எதிர் காலத்தின் கல்வி வளர்ச்சியின் ஏணிப்படிகளாக அமையும். எனவே சமூகத்தில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளை நீக்கி யாவரும் கல்வியை வளர்ப்பதில் கருத்தாக இருக்கும் போது சமூக வளர்ச்சி மேல் நோக்கி நகரம் என்பதில் சந்தேகமில்லை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய சமூக பணிகளில் ஈடுபட்டு வரும் ஓய்வு பெற்ற அதிபர் கதிரவேலு தில்லையம்பலம்

காரை மண்ணில் பிறந்து இன்றும் காரை மண்ணில் வாழ்ந்து இம் மண்ணுக்காக சேவையாற்றி வருபவர்கள் ஒரு சிலரே. அவர்களுள் 80 வயதைக் கடந்த நிலையிலும் பொதுப் பணிகளில் ஈடுபட்டு காரை மண்ணின் வளர்ச்சிக்கு அயராது பாடுபடுபவர் ஓய்வு பெற்ற அதிபர் கதிரவேலு தில்லையம்பலம்.

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக காரைநகர் மணிவாசகர் சபையினுடைய பரீட்சை செயலாளராக இருந்து கல்லூரி மாணவர்களின் சமய அறிவினைப் பெருக்குவதற்கும் பரீட்சைகளில் உயர் பெறுபேறுகளை அடைவதற்கும் அயராது உழைத்து வருகின்றார். அத்துடன் பல்வேறு சமய சமூகப் பணிகளில் ஈடுபட்டு வரும் ஓய்வு பெற்ற அதிபர் க.தில்லையம்பலம் ஆவார்.

விளானை களபூமி காரைநகரை பிறப்பிடமாக கொண்ட இவர் தமது தமிழ் மொழி மூலம் கல்வியை களபூமி சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாசாலையில் கற்று அங்கு சிரேஸ்ட தராதரப் பத்திர வகுப்பில் (S.S.C) சித்தியடைந்தார். பின்பு தனது ஆங்கிலக் கல்வியை காரைநகர் இந்துக் கல்லூரியில் கற்று அவர் ஆங்கில சிரேஸ்ட தராதரப் பத்திர பரீட்சையில் (S.S.C) சித்தியெய்தினார்.

பின்பு அவர் 1953ம் ஆண்டு கேகாலை மாவட்டத்தில் ஆங்கில உதவி ஆசிரியராக நியமனம் பெற்று முப/மடுன்போவா அ.மு.பாடசாலையில் கடமை புரிந்தார். பின்பு பொலனறுவ மாவட்டம் மன்னம் பிட்டி அ.த.க. பாடசாலைக்கு மாற்றம் பெற்று அங்கு உதவி ஆசிரியராக கடமை புரியும் போது ஆசிரிய தராதரப் பத்திர பரீட்சையில் சித்தியடைந்தார். அதன் பின்பு 1961-1962ம் ஆண்டில் யா/பலாலி ஆசிரிய கலாசாலையில் தமிழ் நெறிப் பயிற்சி பெற்றார். பின்பு மாத்தளை மாவட்டம் ஆவ/கடுகவெல அ.மு.பாடசாலையில் உதவி ஆசிரியராக கடமை புரிந்தார். அவர் மன்னம் பிட்டி அ.த.ப.பாடசாலையில் கற்பித்த போது 5ம் வகுப்பு க.பொ.த சாதாரண வகுப்புகளில் படித்த மாணவர்களை பாடசாலை தவிர்ந்த நேரங்களிலும் பிரத்தியேகமாகக் கற்பித்து பரீட்சைகளில் பின்தங்கிய பிரதேச மாணவர்களை சித்தியடையச் செய்தார். அவரது மாணவர்கள் பலர் ஆசிரியர்களாகவும், அதிபர்களாகவும் கிராம சேவையாளர் களாகவும் லிகிதர்களாகவும் கடமை புரிந்தும் இளைப்பாறியும் உள்ளனர். சிறப்பாக கேகாலை மாவட்டத்தில் படித்த முஸ்லீம் மாணவன் ஒருவன் மன்னம் பிட்டி அ.த.க பாடசாலையில் சேர்ந்து ஏழு மாதங்கள் இவரிடம் படித்து முதலாவது மாணவனாக அப்பாடசாலையில் க.பொ.த சாதாரண பரீட்சையில் சித்தியடைந்தமை அக்கல்வி வட்டாரத்தில் இவருக்கு சிறந்த புகழை ஈட்டிக் கொடுத்துள்ளது.

பின்பு இவர் வவுனியா மாவட்டத்தில் செட்டிக்குளம் அ.த.க.பாடசாலை, ஓமந்தை அ.த.ம.வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலும் உதவி ஆசிரியராக கடமை புரிந்து கற்பித்தல் முயற்சியினால் அதிபரது பாராட்டையும் பெற்றுள்ளார்.

பின்பு 1965ம் ஆண்டு மாற்றம் பெற்று காரைநகர் இந்துக் கல்லூரியிலும் மறைஞானசம்பந்தர் வித்தியா சாலையிலும் உதவி ஆசிரியராகக் கடமை புரிந்தார். அப்போது தமது முயற்சியால் தமிழ்பால பண்டிதர் பரீட்சையிலும் இளஞ் சைவப் புலவர் பரீட்சையிலும் சித்தயடைந்து தமது தகமையைக் கூட்டிக் கொண்டார்.

பின்பு 1972ம் ஆண்டு தொடக்கம் 1988ம் ஆண்டுவரை அதிபராக காரைநகர் இந்துக் கல்லூரி ஆரம்பப்பாடசாலையிலும், இலகடி இ.த.க பாடசாலையிலும், காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி ஆரம்ப பாடசாலையிலும் கடமை புரிந்துள்ளார். அப்போது அனேக மாணவர்களை ஐந்தாம் வகுப்பு புலமைப் பரீட்சையில் சித்தியடையவும் ஊக்குவித்துள்ளார்.

இதனால் அதிபர்கள், கல்வி அதிகாரிகள் பெற்றோர்கள் மாணவர்களது நன்மதிப்பையும் பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.

"செய்யும் தொழிலே தெய்வம்"
"முயற்சி மெய்வருந்தக் கூலிதரும்"
என்னும் கொள்கையுடையவர்.

அவர் ஓய்வு பெற்ற பின்பும் காரைநகரில் பொதுத் தொண்டுகளிலும் சமூகத் தொண்டுகளிலும் சேவையாற்றி வருகின்றார். குறிப்பாக காரைநகர் மணிவாசக சபையினர் ஆண்டு தோறும் நடாத்தும் சைவசமய பாட பரீட்சையின் செயலாளராக தொடர்ந்து இருபது ஆண்டுகள் சேவை செய்து வருகின்றார். அத்துடன் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயத்தில் பழைய மாணவர் சங்கம் ஆரம்பித்து உபதலைவராக இருந்து சேவையாற்றுகின்றார். விளானை சனசமூக நிலையத்தின் தலைவராக கடமையாற்றியுள்ளதுடன் விளானை முன்பள்ளியையும் 1998ல் ஆரம்பித்து வைத்தார்.

களபூமி திக்ககரை முருகன் கோயில் திருப்பணிச் சபை செயலாளராக கடமை புரிந்த இவர் காரைநகர் பல நோக்கு கூட்டுறவுச் சங்க இயக்குனர் சபை உறுப்பினராகவும் பதவி வகித்துள்ளார். அத்துடன் காரைநகரில் பல்வேறு நிகழ்வுகளையும் முன்னின்று நடாத்தும் இவரை நீண்ட ஆயுளுடன் சிறப்பாக வாழ எனது ஊர் காரைநகர் கலாண்டு சஞ்சிகை வாழ்த்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகரில் கமநல சேவைகள் நிலையமும் அதன் செயற்பாடுகளும்

முன்னாள் இந்து கலாசார அமைச்சர் அமரர் தியாகராசா மகேஸ்வரனின் முயற்சியால் 4.10.2004 இல் தனியான கமநல சேவைகள் கேந்திரநலையமாக உருவாக்கப்பட்ட காரைநகர் கமநல சேவைகள் நிலையம் பற்றிய நோக்கு

எமது இலங்கைத் திருநாடே ஒரு விவசாய நாடாகும். அதிலும் யாழ்ப்பாண மாவட்டத்திலே நெற் பயிர் என்றும், சிறுதாணியப் பயிர் என்றும், மரக்கறிப் பயிர் என்றும், பணப் பயிர் என்றும் பல் துறை சார்ந்த பயிகள் பயிரிடப்படுவது வழமையானதாகும். இருந்த போதிலும் காரைநகரின் நெற்



கமநலசேவைத் திணைக்களம்

செய்கை என்பது தனித்துவமானது. காரைநகர் பிரதேசத்தின் விவசாயத் துறையை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்ல வேண்டும் என்கின்ற தூர நோக்கில் அமைக்கப்பட்டுள்ள கமநலச் சேவைகள் நிலையத்தின் செயற்பாடுகள் நிறையவே உண்டு.

04.10.2004ம் தேதியன்று உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கபட்ட காலந் தொடக்கம் இற்றை வரை பல சேவைகளை விவசாயிகளுக்கு ஆற்றியே வந்திருக்கின்றது. பசளை விநியோகம் அரச உர மானியச் செயற்திட்டத்தின் கீழ் மானிய உர விநியோகம், விவசாய உபகரண விநியோகம், விவசாய இரசாயன விநியோகம், விதையின விநியோகம், நாற்றுக்கள் விநியோகம் போன்ற.. பல அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்கின்றது.

ஒட்டு மொத்த விவசாயிகளும் ஒரே கூரையின் கீழ் வழிப்படுத்த வேண்டும் எனகின்ற நோக்கிலும் சேவையினை விரிவுபடுத்த வேண்டும் என்கின்ற மனப்பான்மையிலும் புதிதாக ஐந்து கமக்காரர் அமைப்புக்களை அங்கூரார்ப்பணம் செய்து செயற்படுத்தலானது விவசாயத்துறையின் அபிவிருத்தியின் முதல் படி என்றே கருதலாம். இத் துறையின் அபிவிருத்திக்காக வருடாந்தம் பல குளங்களையும் வாய்க்கால்களையும் புனரமைப்புச் செய்து வருகின்றது. மேலும் விவசாயத் துறையை தமது ஜீவனோபாயத் தொழிலாக கொண்டுள்ள விவசாயிகளிற்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் நல்வாழ்வு அளிக்கும் நோக்கில் கமக்காரர் ஓய்வூதியத் திட்டம், விவசாய காப்புறுதி, கமநல சிறுவர் புலமைப் பரிசில் திட்டம், வீட்டுத் தோட்ட செயற்றிட்டம் போன்ற பல திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

மேலும் காலத்தின் தேவைக்கு ஏற்ப கட்டாக்காலியை கட்டுப்படுத்தியும், முட் கம்பியினைப் பயன்படுத்தி வெளிப்புற விவசாய பயிர் பாதுகாப்பு வேலியை நிறுவியும் வேலையாட்கள் இல்லாப் பிரச்சனைக்கு தீர்வு காண நெல் அறுவடை இயந்திரம், சூடடிக்கும் இயந்திரம், உழவியந்திரம் போன்றவற்றின் சேவைகளை வழங்கியும் வந்திருக்கின்றது.

எல்லாவற்றிற்கும் மேலாக "நாம் பயிரிடுவோம் - தேசத்ததை உருவாக்குவோம்" என்னும் விவசாய கொள்கை திட்டத்தின் கீழ் பிரதேச மட்ட அபிவிருத்தி என்பதற்கு அப்பால் கிராமத்திற்கு கிராமம், வீட்டிற்கு வீடு என்கின்ற நிலையில் ஒவ்வொரு வீட்டுச் சூழலிலும் தங்களது வீட்டிற்கு தேவையான பயிரினங்களை பயிரிடுவதன் மூலம் தங்களது சுய தேவைகளை நிறைவு செய்யக் கூடிய வகையில் அவர்களுக்கு சலுகைகள் ஆலாசனைகள் வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வாறாக விவசாயிகளுக்கு சலுகைகள் சேவைகள் போன்றவற்றை வழங்கி வீட்டுத் தோட்ட செய்கையில் சீர்திருத்தத்தினையும் ஏற்படுத்தி வருகின்றது.

மேலும் காரைநகர் பிரதேசத்திற்குரிய தனித்துவமான நெல்லினங்களான மொட்டடைக் கறுப்பன், பெரிய வெள்ளை போன்ற நெல்லினங்களும் சிறுதாணியப் பயிர்களும் பயிரிடப்பட்டு வருவது பாரம்பரியமானதாகும். எவ்வாறிருப்பினும் கடந்த காலங்களில் செய்கை பண்ணப்பட்டு வந்த வீஸ்தீரனம் மிகக் குறைவாகவே இருந்தது. ஆனால் இன்று கமநலச்



கமநலசேவைத் திணைக்களம்

சேவைகள் நிலையத்தின் நான்கு ஆண்டு காலச் சேவைக்குப் பின்னாலே அனைத்து விவசாயிகளும் அனைத்து சேவைகளையும் பெற்று ஏறத்தாழ 1000 ஏக்கர் விஸ்தீரணத்தில் நெற் செய்கை மேற்கொண்டு வருகின்றார்கள். என்பது தான் உண்மை. அது மட்டுமல்ல தற்போது ஒவ்வொரு வீட்டிற்கு வீடு வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கைத் திட்டமும் வருடா வருடம் விரிவாக்கப்படுகின்றது. இவற்றினூடாக மிகக் குறுகிய காலப்பகுதிக்குள் எமது பிரதேச உற்பத்தித் தேவைகளை எமது பிரதேசத்தில் இருந்தே முழுமையாக நிறைவு செய்யக் கூடிய வகையில் கமநலச் சேவைகள் நிலையத்தின் செயற்பாடுகள் அடித்தளமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.•



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் பாடசாலைகள் கற்பித்தல் செயற்பாடுகளில் முன்னேற்றம் கண்டுள்ளனவா? - ஓர் ஆய்வு.

அ.கமலாகரன் (ஓய்வு பெற்ற உதவிக் கல்விப்பணிப்பாளர்)



கல்வி என்பது மனிதனின் பிறப்புரிமை அதனை வழங்க வேண்டியது பெற்றோர், சமூக அமைப்புக்கள், அரசாங்கம் ஆகியோரின் கட்டாய கடமையாகும். எமது காரைநகர் பாடசாலைகள் மேல் கூறிய மூன்று அமைப்புக்களின் உதவிகளுடன் எவ்வாறு தொழிற்படுகின்றது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் பிள்ளைகள் படித்து முன்னேற்றமடைய வேண்டும் என்பதற்காக தமது சக்திக்கு அப்பால் நின்றும் உதவுகின்றனர். அரசாங்கத்தை பொறுத்த அளவில் இலவச பாடநூல்கள், சீருடைத் துணி வழங்குவ தோடு (வருடத்துக்கு ஒரு உடுப்பு மட்டும்) சில சமயங்களில் ஒரு சில பௌதீக வளங்களை வழங்குவதோடும் நிறுத்திக் கொள்கின்றது. சமூக அமைப்புக்களை பொறுத்த வரையில் பாடசாலைகளை ஓரக்கண்ணால் பார்க்கும் நிலையிலேயே உள்ளது.

கற்பித்தல் செயற்பாடுகளை பொறுத்த மட்டில் ஆண்டாண்டு காலமாக கற்பித்தல் செயற்பாடுகள் Walk Talk And Chalk என்ற முறையிலேயே நடைபெறுகின்றது.
1972ம் ஆண்டில் அரசினால் கற்பித்தல் முறையில் மாற்றமொன்று ஏற்படுத்தப்பட்டது. "புதிய பாதையில் கல்வி" என்னும் இந்த திட்டத்தில் மாணவர்கள் செயல் மூலம் உணர்தல் என்னும் குறிக்கோளை கொண்டிருந்தது. ஆனால் அதற்குரிய பௌதீக வளங்கள் இல்லாதபடியால் அதனை பாடசாலைகளில் நடைமுறைப்படுத்துவதில் பெரும் பின்னடைவு ஏற்பட்டது.

இன்றைய நவீன காலத்தில் கற்பித்தலுக்கு நவீன கற்பித்தல் சாதனங்கள் உள்ள போதும் எமது ஊர் பாடசாலைகளில் இவைகள் போதிய அளவு பயன்படுத்தபடுவதில்லை. இவ்வாறாக நவீன முறைக் கல்வியை எமது ஊரில் உள்ள இடைநிலை, உயர்தர பாடசாலைகளில் (தரம் 9-11) நடைமுறைப்படுத்த வேண்டுமானால் பின்வருவன கட்டாய தேவையாக உள்ளது.

1. 40X25 அளவுடைய கட்டிடம்
2. கட்புல, செவிப்புல சாதனங்கள் (Audio, Vidio)
3. தேவையான ஒலி,ஒளி நாடாக்கள் இறுவெட்டுக்கள் (சில தேசிய கல்வி நிறுவனத்தால் வழங்கப்படுகின்றது.)
4. இவைகளை கையாள முறையான தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் மாணவர்கள்
5. முற்போக்கு சிந்தனையுடைய அதிபர்

இவ்வகையான அமைப்புடன் ஓர் பாடசாலை இயங்குமாயின் அங்கு கல்வி கற்கும் மாணவர்களின் தரமும் உயரும். மாணவர்கள் தரமுயர்ந்தால் ஊரின் தரம் உயரும் இவ்வாறான முறையை நகர்புறங்களிலுள்ள பாடசாலைகளில் காணக்கூடியதாக உள்ளது.

ஆரம்பப் பாடசாலைகளை பொறுத்த மட்டில் பெரும்பாலான பாடசாலைகள் மின்வசதியற்றனவாகவும் பெரும்பாலான பிள்ளைகள் கற்றல் உபகரணங்கள் இல்லாமலும் ஊட்டச்சத்து இல்லாமலும் காணப்படுகின்றனர்.

மின்சார இணைப்புக் கிடைத்து கணணியும் கிடைத்தால் அவர்கள் கணணி பற்றிய ஆரம்ப அறிவைப் பெறுவதற்கு வசதியாக இருப்பதோடு கட்புல செவிப்புல சாதனங்களின் மூலமும் நல்ல ஆரம்பக் கல்வியை பெறக்கூடியதாக இருக்கும். ஆரம்பக் கல்வியை மேம்படுத்தாமல் இடைநிலைக் கல்வியில், மேல்நிலைக் கல்வியில் நல்ல பெறுபேறு கிடைக்கும். என்பது வெறும் ஏமாற்றத்தையே தரும். எனவே இக்கட்டுரையை படிக்கும் அனைவரும் ஆரம்பக் கல்விக்கு தங்கள் பங்களிப்பைச் செய்தால் எமது ஊர் கற்றறிந்தவர்கள் நிறைந்த ஊராகத் திகழும் என்பதில் ஐயமில்லை.





காரைநகரில் கிறிக்ககட் சுற்றுப்போட்டி
காரைநகர் பிரதேச சபை காரைநகரில் உள்ள திணைக்களங்களுக்கு இடையே நடாத்தி கிறிக்கட் சுற்றுப்போட்டி கயிறு இழுத்தல் போட்டி என்பவற்றின் போது எடுக்கப்பட்ட படங்கள் பிரதேச சபை இலங்கை போக்கு வரத்து சபை ப.நோ.கூ சங்கம் வைத்தியசாலை உதவி அரசஅதிபர் பணிமனை ஆகிய திணைக்களங்கள் இந்த போட்டியில் கலந்து கொண்டனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை வளங்களால் செழிப்புற்றிருக்கும் காரைநகர்

ஒரு பிரதேசத்தின் அபிவிருத்திக்கு இயற்கை வளங்கள் அவசியமானவை. தெற்காசிய நாடுகளில் மிகச்சிறிய நாடாக மாலைதீவு இருந்த போதிலும் அது செல்வந்த நாடாக திகழ்வதற்கு அங்குள்ள இயற்கை வளங்கள் காரணமாக அமைகின்றன. அதே போன்று இலங்கையில் யாழ்மாவட்டத்தில் ஒரு குட்டித் தீவாக காரைநகர் இருந்த போதிலும் அது இயற்கை வளங்கினால் நிரம்பிக் காணப்படுகின்றது. உயிருள்ள மற்றும் உயிரற்ற வளங்களினால் நிரம்பிக் காணப்படுகின்றது.

காரைநகரில் உள்ள கடற்கரைகள் கண்கவர் மிக்க பிரதேசங்களாகும். குறிப்பாக கசூரினா கடற்கரை இயற்கை எழில் மிக்க பகுதியாகும். சுற்றுலாப் பயணிகளை வெகுவாகக் கவர்ந்து வரும் இக் கடற்கரை சுற்றுலாப் பயணிகள் தங்கும் விடுதிகளை அருகில் கொண்டிருக்கமானால் எதிர்காலத்தில் நல்ல வருவாயை காரைநகர் பிரதேச மக்களுக்கு ஈட்டித் தருவதுடன் நல்ல தொழில் வாய்புக்களும் இப்பிரதேச மக்களுக்கு கிடைக்கக் கூடியதாக இருக்கும்.

காரைநகர் நான்கு பக்கமும் கடலினால் சூழப்பட்டிருப்பதனால் மீன்வளம் நிறைந்த பகுதியாகும். மீன்பிடித் தடைகள் நீக்கப்பட்டு ஒரு ஆரோக்கியமான சூழல் வரும் போது இங்கு பிடிக்கப்படும் மீன்கள் குடாநாட்டு மக்களின் தேவையை பெருமளவு நிவர்த்தி செய்வதுடன் வேறு பிரதேசங்களுக்கு ஏற்றுமதி செய்யக் கூடியதாகவும் இருக்கும். இதற்கு நவீன மீன்பிடித் தொழில் நுட்பங்களை கையாளும் திறமையை இங்குள்ள மீனவர்கள் பெற்றிருக்க வேண்டும்.

பனை வளமும், பெறுமதி மிக்க வெட்டு மரங்களும் காரைநகர் பிரதேசத்தில் காணப்படுகின்றன. தென்னந் தோட்டங்கள் இடையிடையே காணப்பட்ட போதிலும் அவை போதிய பராமரிப்பு இன்மையினால் இன்று அருகிவருகின்றது. பிரதேச மக்கள் தமது சொந்தக் காணியில் உள்ள மரங்களையே தமது வீட்டுக் கட்டுமானப் பணிகளுக்கு பயன்படுத்துவதிலிருந்து அங்குள்ள மரவளம் உறுதி செய்யப்படுகின்றது. இங்குள்ள மரவளம் தொடர்ந்து பேணப்பட வேண்டும். ஏனெனில் நிலத்தடி நீரின் சேமிப்பை தொடர்ச்சியாக உறுதி செய்வதற்காகும்.

வியாவில் , நீலங்காடு போன்ற கிராமங்களில் உள்ள மணல் மண் கட்டுமானப் பணிகளுக்கு மிகவும் உகந்ததாக காணப்படுகின்றது. மருதபுரம் கடற்கரையிலுள்ள ஊரிமண் வீதி புனரமைப்பு வேலைகளுக்கு பயன்படுத்தக் கூடிய சிறந்த தரத்திலுள்ளது.

நன்னீர் வளத்தைப் பொறுத்தவரை காரைநகர் பிரதேசத்தில் பற்றாக்குறையாகவே காணப்படுகின்றது. காரைநகரின் பெரும்பாலான பகுதிகள் நன்னீர் வளமற்றதாகவே காணப்படுகின்றது. மல்லிகை, ஆலங்கன்று, சிவன் கோவிலடி போன்ற ஒரு சில பகுதிகளில் மட்டுமே நிலத்தடி நீரான நன்னீர் உபயோகிக்க கூடிய நிலையில் காணப்படுகின்றது. இந்த நன்னீர் வளமும் மிகையான நுகர்வு காரணமாக எதிர் காலத்தில் இல்லாது போகக் கூடிய வாய்ப்புள்ளது. எனவே இந் நன்னீர் வளத்தின் பாவனையை முகாமைத்துவம் செய்வதன் மூலமே எதிர்கால சந்ததியினரும் பயன்படுத்தக் கூடியதாக இருக்கும். காரைநகரிலுள்ள மழை நீர் சேமிப்புக் குளங்களை புனரமைப்பு செய்வதன் மூலமும் மரங்களை நாட்டி நிலத்தடி நீரை உறுதி செய்வதன் மூலமும் நன்னீர் வளத்தைக் காக்க முடியும். இங்குள்ள தரவைக் குளம் என்பது பாரிய மழை நீர் சேமிப்பு களஞ்சியமாகும். இக் குளம் வருடா வருடம் விவசாய சம்மேளனங்களால் சீராகப் பராமரிக்கப்பட வேண்டும். மேலும் மழை நீர் வழிந்தோடும் கால்வாய்கள் கடற்கரையை அண்மித்த பகுதிகளில் மதகுகள் அமைப்பதன் மூலம் மேலதிக நீரை தேக்க முடியும். கடல் நீரை நன்னீராக மாற்றும் நவீன தொழில் நுட்பத்தை காரைநகரில் அறிமுகப்படுத்த புலம் பெயர்ந்த நாடுகளில் உள்ள காரை வாழ் மக்கள் நிதியுதவி புரிவதன் மூலம் குடிநீர் பிரச்சனைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க முடியும்.

காரைநகர் இயற்கை வழுங்கலால் நிரம்பி வழிகின்ற போதிலும் அவ் வளங்களை அனுபவிக்க, பராமரிக்க போதியளவு மக்கள் அங்கு இல்லை என்பது வெளிப்படை ஒன்பது கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கிய காரைநகரில் இன்று எண்ணாயிரத்திலும் குறைந்த எண்ணிக்கையான மக்கள் தொகையினரே வசிக்கின்றனர். என்பது கவலைக்குரிய விடயமாகும்.



E.சுரேந்திரநாதன் B.Sc(Jaffna), M.Sc(Pera)
பிரதேச சுற்றாடல் அதிகாரி
காரைநகர்.




கிழவன்காடு கலாமன்ற கலைக்காட்சிக்கு மன்ற மாணவர்கள் மங்கள வாத்தியம் முழங்கவிருந்தினர்களை அழைத்துச் செல்லும் காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகரும் கல்வி அபிவிருத்தியும்

**பண்டிதர். மு.சு. வேலாயுதபிள்ளை.**
முன்னாள் அதிபர்,
யா/கலாநிதி ஆ. தியாகராசா ம.ம.வி காரைநகர்.

யாழ்ப்பாணத்தைச் சூழவுள்ள சப்த தீவுகளில் ஒன்றாக விளங்குவது காரைநகர். நாற்புறமும் கடலால் சூழப்பட்டுத் தீவாக இருந்த போதும் கல்விச் சான்றோர்களையும், வளமிகு செல்வர்களையும் தன்னகத்தே கொண்டு விளங்கிய காரணத்தாலும் பொன்னாலையுடன் இணைத்து பாலம் அமைக்கப்பட்டதாலும் காரைநகர் என்னும் பெயர் பெற்றுள்ளது. இப்பெயருக்கு ஏற்ப நகரமாக உயர்வு பெற்று வருவதை அவதானிக்க முடிகிறது.

காரைநகர் தனக்கென தனியான உதவி அரசாங்கப்பிரிவு, தனியான பிரதேசசபை, சுற்றயல் கூறு வைத்தியசாலை, ஆயுள்வேத மருந்தகம், குடிநீர் வசதிகள், மின்சார வசதிகள், பேரூந்துசாலை, வங்கி நிறுவனம், சமுர்த்தி அபிவிருத்தி நிலையம், கமநல சேவை நிலையம், முதியோர் பராமரிப்பு நிலையம், பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பிரபல்யமான கல்லூரிகள், புகழ்பெற்ற ஆலயங்கள் பல அபிவிருத்தி சபைகள் ஆகியவற்றைக் கொண்டுள்ள நகரமாக விளங்குகின்றது.

இவ்வாறு சீரும் சிறப்புமாக விளங்கும் காரைநகரில் கல்வி அறிவை விருத்தி செய்ய முன்வரவேண்டும். கல்வியே கருத்தனம் (செல்வம்) என்பதை உணரவேண்டும். கல்வியே எல்லாச் செல்வங்களிலும் மேலானது. இதனை

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றுப் பிற" என்றார் வள்ளுவர். எனவே இத்தகைய கல்விச் செல்வத்தை சிறப்பான முறையில் வளர்த்துக் கொள்ள வேண்டும். கல்வியோடு நல்லொழுக்கத்தையும் புகட்டி விளையாட்டுத்துறையையும் விருத்தியடையச் செய்தலே மேலான கடமையாகும்.

தற்போது காரைநகரில் எட்டுப் பாடசாலைகள் இயங்கி வருகின்றன. இவற்றில் இரு பாடசாலைகள் 1யுடீ பாடசாலைகளாகவும் (தரம் 1-13 ம் தரம் வரை), இரு பாடசாலைகள் B பிரிவுப் பாடசாலைகளாகவும் (தரம் 1- 11ம் தரம் வரை), ஏனைய நான்கு பாடசாலைகள் கனிஷ்ட பிரிவுப் பாடசாலைகளாகவும் (தரம் 1 - தரம் 5ம் தரம் வரை) இயங்கி வருகின்றன. இப்பாடசாலைகள் யாவும் கற்றல் கற்பித்தல் நடவடிக்கையில் உயர்நிலையில் இருப்பது பெரும் மகிழ்வுக்குரிய விடயமாகும். இதனை 5ம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த (சா/ த) பரீட்சை, க.பொ.த (உ / த) பரீட்சை ஆகியவற்றின் பெறுபேறுகளை யாழ் நகரில் உள்ள பிரபல்யமான பாடசாலைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது அவதானிக்க முடிகிறது. மேலும் உயர வழி சமைக்க வேண்டும். இப்பாடசாலைகள் யாவும் போதிய ஆசிரிய வளங்களையும் கொண்டுள்ளன. பெரும்பாலான பாடசாலைகளில் கட்டிட வசதிகள், மலசலகூட வசதிகள், குடிநீர் வசதிகள் போன்ற பௌதீக வளங்களையும் கொண்டு விளங்குகின்றன. கல்லூரி அதிபர்கள் தமது நிர்வாகத் திறமையுடன் ஆசிரியர் வளத்தையும் பௌதீகவளத்தையும் பயன்படுத்தி பூரணமான கல்வியை மாணவருக்கு வழங்க முன்வர வேண்டும்.

மெல்லக் கற்கும் மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கு தனியான வகுப்பை உருவாக்கிப் பாடசாலை நேரம் தவிர்ந்த வேளையிலும் கற்பிக்க முயற்சிக்க வேண்டும். ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களில் மேலதிக வகுப்புக்கள் நடத்த முன்வரவேண்டும். மாதாந்தப் பரீட்சையின் மூலமும் மாணவர்களை ஊக்கப்படுத்தலாம்.

இன்றைய சூழ்நிலையில் மாணவர்களின் ஒழுக்கம் பேணப்படவேண்டும். மாணவர்களிடத்தில் பணிவு, இன்சொல், அன்பு, பெரியோரைக் கனம் பண்ணுதல் போன்ற நற்பண்புகளை வளர்த்தெடுக்க வேண்டும். பாடங்களைப் போதிக்கும் வேளையில் பாடத்தோடு பாடமாக நல்ல கருத்துக்களை ஆசிரியர் புகட்டி விடவேண்டும். காலைப்பிரார்த்தனையின் போதும் மூன்று நிமிடங்களாவது நற்சிந்தனை வழங்க வேண்டும். பாடசாலைக்கு மாணவர் வரவு நிலையை நாளாந்தம் கவனிக்கப்பட வேண்டும்.

விளையாட்டுத் துறையில் ஊக்கமளிப்பதன் மூலம் கல்வியை வளர்ச்சியடையச் செய்யலாம். காலையில் நடைபெறும் உடற்பயிற்சியை நாளாந்தம் வழங்குவதால் சோர்வை நீக்கி உற்சாகத்துடன் கல்வி பயில வழிவகுக்கும். மெய்வல்லுநர் விளையாட்டுக்களையும் உடற்பயிற்சி ஆசிரியர் உதவியோடும் விசேட பயிற்சியாளர் மூலமும் நுட்பமான முறையில் பயிற்றுவிக்கப்பட வேண்டும். விளையாட்டு உபகரணங்கள், விசேட பயிற்சியாளர் வேதனம் ஆகியவற்றை காரை அபிவிருத்திச்சபை வழங்க முன்வரவேண்டும்.

மூன்று வயது தொடக்கம் ஐந்து வயது வரையிலான சிறார்களுக்கு பதினான்கு முன்பள்ளி நிலையங்கள் இயங்குகின்றன. இந்நிலையங்களில் முன்னூற்றைம்பது சிறார்கள் கல்வி பயில்வதோடு இருபத்தெட்டு ஆசிரியர்கள் பயிற்றுவிக்கின்றனர். இச்சிறார்களின் விருத்தியில் மிகக் கூடுதலான கவனம் எடுக்கப்பட வேண்டும். முதன்முதலாகப் பயிலவரும் சிறார்களின் கல்வி மகிழ்ச்சிகரமானதாகவும், அறிவு சார்ந்தனவாகவும் அமைய வேண்டும். இவர்களின் விருத்திக்குத் தளபாடங்கள், கற்றல் உபகரணங்கள், விளையாட்டுப் பொருட்கள் இன்றியமையாத அடிப்படை வசதிகளாகும். இவைகள் பெரும்பான்மையான முன்பள்ளியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாதது பெருங்குறையாகும். ஆசிரியர்களின் மாதாந்த வேதனத்தின் ஒரு பகுதியை பிரான்சு காரை நலன்புரிச் சங்கம் வழங்கி வருகின்றது. ஆசிரியைகளின் ஆளுமை விருத்திக்கு ஏற்ற பயிற்சி அளிக்கப்படுவதோடு சிறார்களுக்குப் போட்டிகளை ஏற்படுத்தி சிறார்களையும் ஆசிரியர்களையும் ஊக்கப்படுத்த வேண்டும்.

முதியோர் கல்வியைப் பொறுத்தவரையில் சனசமூக நிறுவனங்கள் ஏனைய நிறுவனங்கள் ஊடாக வாசிகசாலைகளை எல்லாக் குறிச்சிகளிலும் ஏற்படுத்தி அவற்றில் தினசரிப் பத்திரிகைகள், வாராந்தப் பத்திரிகைகள், சமய சம்பந்தமான சஞ்சிகைகள் போன்றவற்றை வாசித்துப் பயன்பெற உதவவேண்டும். மேலும் ஆலயங்களில் புராணப்படிப்புக்கள், பஜனைகள், சமய சம்பந்தமான சொற்பொழிவுகள் ஆகியவற்றை செயற்படுத்துவதன் மூலம் பொது மக்களின் அறிவை விருத்தி செய்வதோடு வீண்கதைகள், சச்சரவுகள் என்பவற்றிலிருந்து நீங்கிக்கொள்ளலாம். சமூக ஒற்றுமையையும் வளர்த்துக் கொள்ளலாம்.

உயர்தர (A/L) மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்த வகுப்புக்களையும் கணனி, ஆங்கில அறிவை விருத்தி செய்ய தனியான வகுப்புக்களை நடத்த காரைநகர் அபிவிருத்திச்சபை முன்வரவேண்டும். இதற்கான ஆசிரியர்களை நியமித்து ஒழுங்காகப் போதிக்கப்பட வேண்டும்.

காரைநகர் மாணவர்களிடையே தமிழ்த்தினப் போட்டி ஆங்கில தினப்போட்டி, கணித விஞ்ஞான போட்டி, விளையாட்டுப் போட்டி, பெரு விளையாட்டுப் போட்டிகள் யாவும் சிறப்பாக நடத்தப்பட்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட வேண்டும். இதனால் வளரும் சமுதாயம் உற்சாகத்தையும் உயர்ந்த ஆளுமையையும் பெற்றுத் திகழ்வார்கள்.

காரைநகர் அபிவிருத்திச்சபை கல்வி விடயத்தில் கூடிய கவனம் எடுத்துச் செயற்பட வேண்டும். ஓய்வு பெற்ற கல்விமான்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களைக் கொண்ட குழுவை உருவாக்கி கல்விக்கான செயற்றிட்டங்களை வரைந்து சுயமாகச் செயற்பட அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும். அவ்வாறு செயற்படுமாயின் கல்வியில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

இவ்வகையில் கல்வியில் மாற்றத்தை ஏற்படுத்தி வளமான சமுதாயத்தை உருவாக்க முயல்வோமாக.

www.karainews.com

## புயல் அடித்தபோது

எங்கிருந்து வந்தான் இந்தப் புயலரசன்?
எங்கிருந்து வந்தான்?
எவரேவத்தான் அடித்தான்?
எங்கிப்போ போனான்?
ஏனெமையே தண்டித்தான்?

ஓரிரவு அன்னான்
உரு ஆடிப் போக... வந்த
காலையிலெம் ஊர்முற்றும் கந்தலாய்க் கிடந்ததையோ!
அவனகன்ற பின்பும் அவன்தடமாய்
விடாமழையும்
இடைக்கிடை சுழல்காற்றும்
எம் திசையைத் தாக்கிற்றே!
ஆனை மிதித்து அழிந்த வயலாயெம்
சேனை புலவெல்லாம்
சிதறிச் சிதைந்து போச்சு!
இருநூறு முன்னூறு வயதான
சூகாத
வரம் பெற்ற
மனிதன் வதைக்காக எண்ணற்ற
மரங்கட் கெமனாகி அவற்றை அசுரகரம்
கொண்டுலுப்பி ஆட்டி குரடசாய்த்தான் புயலசூரன்
விண் எட்ட அன்று வியாபித்த
ஆல்,அரசின்
எண்ணத்தில் இடியாய் இறங்கி
அவற்றை ஆணி
வேரோடு பேர்த்துப் பிடுங்கிச் சரித்துவிட்டெம்
கூரைகளால் அவற்றைப்
போர்த்திவிட்டும் அஞ்சலித்தான்!
வீதிகளை வெள்ளத்துள் வீழ்த்திச் சமாதி செய்தான்
தன்வரவுக்கு அத்தாட்சி யாக
பெருவெள்ளம்
கொண்டிந் நிலத்தின்மேல்
கோலங்கள் போட்டு விட்டான்
அக்கோலம் மண்ணை அலங்கோலம் ஆக்கியது.
குக்கிராமம் எல்லாம் குதறுண்டு
அவனினது
கோர தாண்டவத்தில் குடி முழுகிப் போயிற்று.
கால் நடைகள் சாக,
களனி நிலம் பாழாக,
வீடுவாசல் ஊற, மரம்விழுந்தும் பலசாய
கட்டிலின் மேல் வெள்ளம் கடைவிரிக்க
கதியற்று
பட்டகாலிலே பட்டு,
பதியிழந்து சொத்திழந்து,
முன்காணா அனர்த்தத்தில் மூழ்கிச்
சனம் முழுதும்
தின்பத்தில் தோந்தீரஞ் சுவறி விறைத்திடிய
தலைக்குமேலே வெள்ளம்
தனதாற்றல் நிரூபிக்க
நலன்புரி நிலையத்தில் நம்மூரும் போந்துபோச்சு.

த.ஜெயசீலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் மகேஸ்வரனின் நினைவு நிகழ்வில் பெரும் எண்ணிக்கையானோர் பங்கேற்பு.



முன்னாள் இந்து கலாசார அலுவல்கள் அமைச்சரும் முன்னாள் யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அமரர் தியாகராஜா மகேஸ்வரனின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வுகள் டிசெம்பர் மாதம் 22ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஈழத்துச் சிதம்பர அறப்பணி நிலையத்தில் நடைபெற்றன. குடா நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் பெரும் எண்ணிக்கையான மக்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.




காரைநகர் அபிவிருத்திச் சபை செயலாளரும் ஓய்வு பெற்ற அதிபருமான பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. நினைவுரைகளை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரீகத் துறை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம், ஆங்கிலத்துறை விரிவுரையாளர் கலாநிதி திருமதி வீரமங்கை யோகரட்ணம், இலங்கை வங்கி வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் என்.சிவரட்ணம், யாழ்.வர்த்தக சங்கத் தலைவர் எஸ்.ஜெயக்குமார், விவாகப் பதிவாளர் திருமதி சகுந்தலா ஏகநாதன், காரைநகர் இந்துக் கல்லூரி அதிபர் ஆ.குமரேசமூர்த்தி உள்ளிட்ட பலர் நிகழ்த்தினர்.



இந்த நிகழ்வில் "பத்திரிகையின் பார்வையில் மகேஸ்வரன்", "நாடாளுமன்றம் சூட்டிய புகழாரம்",




"நாடாளுமன்றில் மகேஸ்வரன்" ஆகிய மூன்று நூல்களையும் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் வெளியிட்டு வைத்தார். ஓய்வு பெற்ற நீதிபதியும் ஊர்காவற்றுறை பதில் நீதவானுமான எஸ்.ஏ.ஈ.ஏகநாதன், காரைநகர் இலங்கை வங்கிக் கிளை முகாமையாளர் எஸ்.சிவகுமார் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

இந்த மூன்று நூல்களையும் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தொகுத்திருந்தார். நிகழ்வின் ஆரம்பத்தில் திருமதி விஜயகலாவின் தாயார் அமரர் மகேஸ்வரனின் திருவுருவப் படத்துக்கு மலர்மாலை அணிவித்தார்.

நூலின் ஆய்வுரையினை ஆசிரியர் ந.விஜயசுந்தரம் நிகழ்த்தினார். முன்னதாக ஈழத்துச் சிதம்பரத்தில் விஷேட அபிஷேக பூசை வழிபாடுகளும் பஜனை நிகழ்வுகளும் இடம்பெற்றன. இந்த நிகழ்வுகளில் குடா நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பெரும் எண்ணிக்கையான மக்கள் வருகை தந்திருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "உலகலாவிய ரீதியில் இந்து மதத்தை பிரகாசிக்கச் செய்தவர் அமரர் தியாகராஜா மகேஸ்வரன்"

-நினைவுப் பேருரையில் புகழாரம்

உலகலாவிய ரீதியில் இந்து மதத்தைப் பிரகாசிக்கச் செய்ய அரும்பாடுபட்டவர் அமரர் தியாகராசா மகேஸ்வரன் அன்பு நிறைந்த உள்ளம் அவரிடம் இருந்தது. அன்பு இருக்கும் இடத்தில் இறைவன் அருள் நிறைய இருக்கும். இவ்வாறு தெரிவித்தார் யாழ் பல்கலைக்கழக இந்து நாகரீகத் துறை விரிவுரையாளர் நாச்சியார் செல்வநாயகம்.

முன்னாள் இந்து கலாசார அமைச்சர் தியாகராசா மகேஸ்வரனின் ஓராண்டு நினைவு நிகழ்வுகள் டிசெம்பர் 22ல் காரைநகர் சிவன் கோயில் அறப்பணி நிலையத்தில் இடம்பெற்ற போது அங்கு நினைவுப் பேருரை நிகழ்த்தும் போதே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து உரையாற்றும் போது

உள்ளத்தால் நல்ல உள்ளம் உறங்காதது போல அவரது ஆத்மா தில்லைக் கூத்தன் திருவடிகளிலே இருந்து நித்தமும் எங்கள் உயர்வுக்காக பிரார்த்திக்கும்.

மக்கள் அனைவருக்கும் எதுவித வேறுபாடுமின்றி சேவை செய்த அனைவரையும் மதிக்கின்ற பண்பை பெற்றிருந்தவர். அத்தகைய உத்தமனை இழந்து விட்டோம். அவரது உடலை இழந்தாலும் அவரது ஆத்மா எங்களுடனே இருக்கும் என்றார்.

பண்டிதர் M.S.வேலாயுதபிள்ளை அவர்கள் தனது தலைமை உரையில் காடு மண்டிக்கிடந்த காரைநகர் மீணடும் நகராக தலைநிமிர்ந்து நிற்பதற்கு காரணம் அமரர் மகேஸ்வரன் அவர்கள். காரைநகரில் பல்வேறு அபிவிருத்தி கட்டமைப்புக்களை உருவாக்கி இம் மக்களுக்கு உயர்வான வாழ்வை வகுத்து கொடுத்தார்.

இலங்கை வங்கி வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் என்.சிவரட்ணம் தனது உரையில் ஆயுதத்தை பாவிக்காமல் பேச்சு வன்மையை பாராளுமன்றில் பிரயோகித்து மக்களின் விடிவுக்காய் பாடுபட்டவர். அவருடைய காலத்தில் ஏற்பட்ட இந்துமத மறுமலர்ச்சி மீண்டும் எப்போது வரும் என ஏங்கித்தவிக்கின்றனர் எமது மக்கள்.

யாழ் வர்த்தக சங்க தலைவர் N.ஜெனக்குமாரன் தனது உரையில் A 9 பாதை மூடப்பட்ட போது யாழ்ப்பாணத்தில் 99 வீதமான ஆலயங்கள் இருளில் மூழ்கியிருந்தது. அதனை அறிந்து உடனடியாக கப்பல் மூலம் தேங்காய் எண்ணெய், கற்பூரம் அனுப்பி ஆலயங்களில் ஒளியூட்டியவர் அதுபோன்று எமது மக்களின் உணவுத் தேவைகளையும் பூர்த்தி செய்ய பாடுபட்டவர்.

இந்துக் கல்லூரி அதிபர் ஆ.குமரேசமூர்த்தி தனது உரையில் தமிழ் மக்களுக்கு மட்டும்மன்றி சிறுபான்மை இனமான முஸ்லீம் மக்களின் உரிமைக்காகவும் குரல்கொடுத்தவர் எனக்குறிப்பிட்டார்.

## ஈழத்துச் சிதம்பரத்தில் திருவாதிரை திருவிழா

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் மார்கழி திருவாதிரை உற்சவம் ஜனவரி மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் சிறப்பாக நடைபெற்றது.

தினமும் காலை 7.00 மணிக்கு மூலமூர்த்திகளுக்கு விஷேட அபிஷேக ஆராதணைகளும் முற்பகல் 10.00 மணிக்கு திருவெண்பா ஓதலும் 11.30 மணிக்கு வசந்த மண்டப பூசையும் தொடர்ந்து சுவாமி திருவீதி உலா வருதலும் இடம்பெற்றது.

திருவாதிரை உற்சவத்தில் உயர் திருவிழாவான பஞ்சரத பவனி ஜனவரி மாதம் 9ம் திகதியும் வெள்ளிக் கிழமையும் மறுநாள் ஆருத்திரா அபிஷேகம் திருவூடல், தீர்த்தம் உற்சவம் என்பனவும் இடம் பெற்றது.

இந்த உற்சவங்களைக் காண பல்லாயிரக் கணக்கான மக்கள் ஒன்று கூடினார்கள். இதற்கான ஏற்பாடுகளை ஆலய ஆதீன கர்த்தாக்களும் திருப்பணிச் சபை, மணிவாசகர் மடாலயம், அறப்பணி நிலையம், மணிவாசக சபை, பிரதேச செயலகம், பிரதேச சபை என்பன இணைந்து உற்சவ ஒழுங்கு, சுகாதாரம், போக்குவரத்து, பாதுகாப்பு, குடிநீர், அன்னதானம், திருவாசக விழா போன்ற இதர பணிகளை நெறிப்படுத்தி இருந்தனர்.

## காரைநகர் மகோற்சவங்கள்

### பயிரிக்கூடலில்

காரைநகர் பயிரிக்கூடல் சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் ஜனவரி மாதம் 31ம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து தினங்கள் இடம்பெற உள்ளது.

இந்த மகோற்சவத்தின் தேர்த்திருவிழா பெப்ரவரி மாதம் 8ம் திகதி ஞாயிற்றுக் கிழமையும் தீர்த்தத் திருவிழா 9ம் திகதி திங்கட் கிழமையும் இடம் பெற உள்ளது.

### மணற்காட்டில்

காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் மார்ச் மாதம் 12ம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் சிறப்பாக நடைபெற உள்ளது. மகோற்சவத்தின் தேர்த்திருவிழா மார்ச் மாதம் 25ம் திகதியும் தீர்த்த திருவிழா 26ம் திகதியும் இடம்பெற உள்ளது.

### திண்ணபுரத்தில்

காரைநகர் சிவன் கோயில் வருடாந்த பங்குனி மகோற்சவம் மார்ச் மாதம் 30ம் திகதி திங்கட் கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் இடம்பெற உள்ளது. இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகோற்சவத்தில் தேர்த்திருவிழா ஏப்பிரல் மாதம் 7ம் திகதியும் தீர்த்தத் திருவிழா மறுநாள் செவ்வாய் கிழமை 8ம் திகதியும் திருக்கல்யாண உற்சவம் 9ம் திகதி புதன் கிழமையும் இடம்பெற உள்ளது.

வாரிவளவில்


காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் ஏப்பிரல் மாதம் 6ம் திகதி திங்கட் கிழமை கொடி ஏற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து இடம்பெறும் மகோற்சவத்தில் சித்திரைப் புத்தாண்டு தினமான ஏப்பிரல் மாதம் 14ம் திகதி செவ்வாய்க் கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்த திருவிழாவும் இடம்பெற உள்ளது.

கருங்காலியில்

காரைநகர் கருங்காலி முருகமூர்த்தி ஆலய வருடாந்த மகோற்சவம் ஏப்பிரல் மாதம் 30ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் மகோற்சவம் இடம்பெற உள்ளது. தேர்த்திருவிழா மே மாதம் 8ம் திகதியும் தீர்த்தத் திருவிழா மே மாதம் 9ம் திகதியும் இடம்பெற உள்ளது.

## மணற்காட்டில் அமரர் மகேஸ்வரன் ஞாபகார்த்த மண்டபம் ஜனவரி 10ல் திறப்பு





காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்மன் ஆலய திருவீதியில் அமைக்கப்பட்டுள்ள அமரர் தியாகராசா மகேஸ்வரன் ஞாபகார்த்த அன்னதான மண்டபம் ஜனவரி மாதம் 10ம் திகதி திறந்து வைக்கப்பட உள்ளது.

ஆலய வீதியில் மிகப் பெரிய அன்னதான மண்டபம் அமைக்கப்பட்டு ஆலயத்திற்கு வரும் அடியார்களுக்கு அமுதளிக்க வேண்டும் என்ற அமரர் தியாகராஜா மகேஸ்வரனின் நீண்ட கால விருப்பத்திற்கு அமைய அவரது குடும்பத்தினரால் ஆலய தெற்கு வீதியில் அமரர் 75 இலட்சம் ரூபா செலவில் புதிய அன்னதான மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மண்டபம் அமரரது பிறந்த தினமான ஜனவரி மாதம் 10ம் திகதி திறந்து வைக்கப்பட உள்ளது. அன்றைய தினம் அம்பாளுக்கு விஷேட அபிஷேக பூசை வழிபாடுகளும் புதிய மண்டபத்தில் அன்னதான நிகழ்வும் திறப்பு விழா நிகழ்வுகளும் இடம்பெற உள்ளது.

## "கலைகளை வளர்க்கும் முயற்சியில் கிழவன் காடு கலாமன்றம்"

–உதவிப் பிரதேச செயலர் சொல்கிறார்







பாரம்பரியமாகப் பின்பற்றபட்டு வருகின்ற கலைப் பண்புகள் இன்று அழிவடைகின்றன அல்லது பாதுகாக்க முடியாத நிலையில் உள்ளது. அதனைப் பாதுகாக்க வேண்டும் பெருகூட்ட வேண்டும் என்ற நோக்கத்திலும் கிராமப்புற மாணவர்கள் தங்கள் திறமைகளை வெளிக்கொணரும் நோக்கிலும் இந்த கிழவன் காடு கலாமன்றம் தனது பணியை ஆற்றி வருவது பாராட்டுக்குரிய விடயமாகும்.

இவ்வாறு தெரிவித்தார் காரைநகர் கோவளத்தைச் சேர்ந்தவரும் உடுவில் உதவிப் பிரதேச செயலாளராக கடமையாற்றும் அ.சோதிநாதன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காரைநகர் கிழவன் காடு கலா மன்றம் நடாத்திய கலைக் கண்காட்சி நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு கண்காட்சி நிகழ்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது சமய நம்பிக்கை கொண்ட பிரதேசம் காரைநகர் பிரதேசம், காரைநகர் மக்கள் சமய வழிபாட்டில் மிகவும் உறுதி உடையவர்கள் அந்தப் பெருமை தொடர்ந்து பாதுகாக்கப்பட வேண்டும்.

ஆரம்ப காலங்களில் பயன்படுத்தப்பட்டு வந்த இசைக்கருவிகள் பல இன்று அற்றுப் போய் அல்லது குறைவடைந்து போய் உள்ளது. அவற்றினை அழியவிடாது பாதுகாக்க வேண்டிய தேவை உள்ளது. எமது கலாசார பண்பாடுகள் பாதுகாக்கப்படா விட்டால் எமது பிரதேச பண்புகள் இழக்கப்படும் நிலை ஏற்படும் என்கிறார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய பேராசிரியர் கலாநிதி வே.தர்மரட்ணம் மாணவர்களின் திறமைகளை வெளிக்கொணர்வதுடன் மன்றத்தின் செயற்பாடுகளையும் புடம் போட்டுக் காட்டும் நிகழ்வாக இந்த நிகழ்வு இடம்பெறுகின்றது. மாணவர்கள் மட்டத்தில் கலைகளை மேம்படுத்த நிதி வசதிகள் வழங்கப்பட வேண்டும். இவ்வாறான மன்றங்களுக்கு நிதி உதவி வழங்கப்படாமை வருந்தத்தக்கது.

வருங்காலத்தில் எங்கள் கலைகள் வளர வேண்டுமாயின் இளம் சமுதாயமாகிய பாடசாலை மாணவர்கள் தான் வளர்க்க வேண்டும் அதற்குரிய சூழலை நாங்கள் தான் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். கலைகள் வளர்வதற்கு ஆலயங்களின் நிர்வாகிகளும் பிரதேச செயலகங்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார்.

காரைநகர் பிரதேச செயலக நிர்வாக அதிகாரி ஆ.சத்தியமூர்த்தி உரையாற்றும் போது பண்பாடுகள் சிதைக்கப்பட்டும் சீர்குலைக்கப்பட்டும் உள்ள நிலையில் இவ்வாறான கலைகள் எமது மனதைப் பண்படுத்தும்.

காரைநகர் வாரிவளவு நல்லியக்கசபை ஊடாக மாணவர்கள் ஊக்கிவிக்கப்பட்டு வந்தனர். அந்த சபை இன்று இயங்காமல் இருப்பது துர்ரதிஷ்டமே.

பண்பாடுகள் பாரம்பரியங்களைக் கட்டிக் காப்பதில் காரைநகர் மக்களுக்கு தனித்துவமான இடம் இருக்கிறது. அதனை அகலாது கட்டிக்காக்க வேண்டும். பிரிவினைகளை தவிர்த்து சின்ன உள்ளங்களை வளத்தெடுக்க எதிர்கால சந்ததியினரை தட்டிக் கொடுக்க முன்வர வேண்டும். இன்றைய சூழ்நிலையில் கலாசார விழுமியங்களை கட்டிக் காப்பதற்காக கலைகள் வளர்க்கப்பட வேண்டும்.

செழிப்பான பல்லாயிரக் கணக்கான மக்களை கொண்டிருந்த ஊர் இன்று காடு போல் செழிப்பின்றி இருப்பது மன வேதனையை தரும் விடயம் நிர்வாக ரீதியில் மேற்கொள்ளக் கூடிய உதவிகளை எமது பணிமனை ஊடாக மேற்கொள்வோம் என்றார்.

கிழவன் காடு கலாமன்றத தலைவர் ந.சோதிநாதன்



தலைமையில் ஒக்டோபர் மாதம் 5ம் திகதி காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்ற இந்த கலைக் கண்காட்சியில் சிறப்பு விருந்தினர்களாக காரைநகர் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ஆ.சத்தியமூர்த்தி, E.S.P.நாகரட்ணம், மகாராணி K.சோமசேகரம் உள்ளிட்ட பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர். இந்த கண்காட்சியில் மன்ற மாணவர்களின் கலை ஆக்கங்கள் பல காட்சிப்படுத்தப்பட்டிருந்ததுடன் காரைநகர் ஆலயங்களின் மாதிரிகள், இசைக் கருவிகள் என்பன பார்வையாளர்களை கவர்ந்திருந்தது.

## காரைநகரில் இலட்சர்ச்சனை

காரைநகர் மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் விநாயக விரத ஆரம்பமான டிசெம்பர் மாதம் 13ம் திகதியில் இருந்து 20 தினங்கள் இலட்சார்ச்சனை, யாகம் என்பன இடம்பெற்றது. தொடர்ந்து ஜனவரி மாதம் 2ம் திகதி வெள்ளிக் கிழமை பெருங்கதை படிப்பும் சுவாமி உலா வருதலும் இடம்பெற்றது. இருபது நாட்களாக இடம்பெற்ற யாகம் இலட்சார்ச்சனை என்பவற்றில் பெருமளவு பக்தர்கள் கலந்து கொண்டனர்.

இதே போன்று வாரிவளவு கற்பக விநாயகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்திலும் இருபது தினங்கள் இலச்சார்ச்சனை யாகம் என்பன இடம்பெற்றதுடன் ஜனவரி மாதம் முதலாம் திகதி கஜமுக சங்காரமும் இடம்பெற்றது.

## காரைநகரை தாக்கிய நிஷா சூறாவளி

யாழ் குடாநாட்டை கடந்த நவம்பர் மாதம் 25ம், 26ம் திகதிகளில் தாக்கிய நிஷா சூறாவளி காரைநகர் பிரதேசத்தையும் மோசமாக பாதிக்க வைத்தது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை ஒரு வாரமாக முடங்கியதுடன் ஆயிரக்கணக்கான குடும்பங்களும் பாதிக்கப்பட்டன.

நவம்பர் 25ம், 26ம் திகதிகளில் வீசிய கடும் காற்றினாலும் கனத்த மழையினாலும் காரைநகரின் கரையோர கிராமங்களான மருதபுரம், பிட்டியெல்ல, ஊரி, வேரப்பிட்டி, வியாவில் ஆகிய கிராமங்களின் குடியிருப்புக்களும் வெள்ளத்தில் மூழ்கியதுடன் காரைநகர் வீதிகள் அனைத்தும் வெள்ளங்களினால் நிரம்பி காணப்பட்டன.

இதனால் கரையோர கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இடம்பெயர்ந்து முகாம்களில் தஞ்சமடைய நேரிட்டது. காரைநகர் கிழக்குக் கரையோரங்களைச் சேர்ந்த 35 குடும்பங்களைச் சேர்ந்த 110 பேர் வலந்தலையில் அமைந்துள்ள இளைஞர் பயிற்சி நிலைய மண்டபத்திலும் மேற்குக் கரையோர கிராமங்களைச் சேர்ந்த 47 குடும்பங்களைச் சேர்ந்த 150 பேர் வியாவில் பொது மண்டபத்திலும் தங்க வைக்கப்பட்டனர். இவர்களுக்கு சமைத்த உணவு மற்றும் அடிப்படை வசதிகளை காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையும் அரச சார்பற்ற நிறுவனங்களும் வழங்கினர்.

கடும் காற்று மழை காரணமாக ஏற்பட்ட கடற் கொந்தழிப்பு காரணமாக பொன்னாலை பால வீதி கடும் சேதத்திற்கு உள்ளனதுடன் போக்குவரத்துகளும் அந்த இரு தினங்களும் முற்றாகத் தடைப்பட்டது. அத்துடன் மின்சாரம், தொலைபேசி என்பனவும் முற்றாகத் தடைப்பட்டதால் வெளி உலகுடனான தொடர்புகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டு காரைநகர் தனிமைப்படுத்தப்பட்டது. ஓரிரு தினங்களில் போக்குவரத்து ஆரம்பமான பொழுதிலும் பஸ்சேவை, கனரக வாகனங்களில் போக்குவரத்து பத்து தினங்களுக்கு மேல் தடைப்பட்டிருந்தது.

இந்த சூறாவளியினால் காரைநகரில் சுமார் 1500 பனை மரங்கள் முறிந்து வீழ்ந்ததுடன் நூற்றுக்கணக்கான பயன்தரு மரங்களும் வேருடன் சாய்ந்து வீழ்ந்துள்ளது 50க்கும் மேற்பட்ட பனை மரங்கள் வீடுகள், கடைகள், கட்டடங்கள் என்பவற்றில் வீழ்ந்து அவற்றிற்கு பாரிய சேதத்தை ஏற்படுத்தியது. வியாவில் ஐயனார் ஆலய முன்றலில் நின்ற சுமார் 300 வருட பழமை வாய்ந்த மரம் வேருடன் சாந்து வீழ்ந்ததுடன் இலகடி அத்திபுரம் முருகன் ஆலயத்தில் நின்ற பாரிய ஆலமரம் வேருடன் சாந்து வீழ்ந்ததால் ஆலமரத்தின் கீழ் இருந்த விக்கிரகங்களும் நிலத்தில் புதையுண்டன.


காரைநகரில் கடந்த வருடம் அமரர் ஜெ.தில்லையம்பலவாணரின் முயற்சியினால் லண்டன் காரை அபிவிருத்திச் சபையின் நிதி உதவியுடன் காரைநகர் அபிவிருத்தி சபையினால் காரைநகரில் உள்ள விவசாய வாய்க்கால்கள் மதகுகள் என்பன புனரமைக்கப்பட்டிருந்தன. இதனால் கடந்த ஆண்டு காரைநகரில் நெல் நல்ல விளைச்சலை தந்திருந்தது. 26, 27 இல் பெய்த கடும் மழையினால் காரைநகர் பிரதேசம் எங்கும் கடும்வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. அதனை இந்த மதகுகள் ஊடாக அகற்ற முயற்சித்த போது மதகுகளின் பூட்டுத் திறப்புகள் இன்மையால் பெரும் இக்கட்டான நிலை ஏற்பட்டது. கிராம சேவையாளர்களும் பிரதேச மக்களும் எடுத்த முயற்சியினால் பூட்டுக்கள் உடைக்கப்பட்டு நீர் அவசரஅவசரமாக வெளியேற்றப்பட்டது. காரைநகர் அபிவிருத்தி சபையில் பொறுப்பான பதவிகளில் இருப்பவர்களில் தம்வசம் அந்த திறப்புகள் வைத்திருப்பதுடன் அவர்கள் யாழ் குடாநாட்டிலே நிரந்தரமாக வசிப்பதனால் அந்த விபரீதம் ஏற்பட்டது. அத்துடன் அமரர் தில்லையம்பலவாணரின் காலத்திற்கு பின்னர் மதகு பூட்டுகள் செப்பனிடப்படாமலும் பாராமரிப்பின்றி இருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு பூட்டுக்கள் உடைக்கப்பட்டு வெள்ள நீர் வெளியேற்றியதால் வெள்ள அனர்த்தம் குறைக்கப்பட்டதுடன் நெற்செய்கை அழியாமலும் காக்கப்பட்டது.

அத்துடன் கடலில் எழுந்த பேரலை காரணமாக நூற்றுக்கும் மேற்பட்ட கடற்தொழிலாளர்களின் மீன்பிடி வலைகள், மீன்பிடி உபகரணங்கள் என்பன கடலுடன் அடித்துச் செல்லப்பட்டது. இதனால் பல இலட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டதுடன் தொழிலையும் இழக்க நேரிட்டது.

காரைநகர் பிரதேச செயலக தரவுகளின் படி காரைநகரில் 250 வீடுகள் சேதமடைந்ததுடன் 800 குடும்பங்களைச் சேர்ந்த 2566 பேர் பாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த பாதிப்பு மேலும் அதிகமாகவே காணப்படுகின்றது.

## இலங்கை வங்கிக்கு புதிய முகாமையாளர்

காரைநகர் இலங்கை வங்கியின் புதிய முகாமையாளராக ஒக்டோபர் மாதம் முதல் இராசையா சிவகுமாரன் அவர்கள் பதவியேற்றுள்ளார்.



இலங்கை வங்கி காரைநகர் கிளையின் முகாமையாளராக கடமையாற்றிய அழ.பகீரதன் இலங்கை வங்கியின் வடபிராந்திய தலைமை காரியாலயத் திற்கு இடமாற்றமாகித் சென்றதை அடுத்தே இ.சிவகுமாரன் முகாமையா ளராக நியமிக்கப்பட்டார்.

காரைநகர் சைவமகா சபைக்கு அண்மையை பிறப்பிடமாக கொண்ட இவர் 1977இல் வங்கிச் சேவையில் இணைந்து கொண்டார். காரைநகர் இந்துக் கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரி என்பவற்றின் பழைய மாணவரான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் வவுனியா, கொழும்பு, மட்டக்களப்பு, காத்தான்குடி மற்றும் இலங்கை வங்கியின் வடபிராந்திய தலைமையகம் ஆகியவற்றில் கடமையாற்றி தற்போது காரைநகர் கிளையின் முகாமையாளராக கடமையேற்றுள்ளார்.

இடம் மாற்றம் பெற்று சென்ற முகாமையாளர் அ.பகீரதனுக்கான சேவைநலன் பாராட்டு விழா ஒக்ரோபர் மாதம் 20ம் திகதி இலங்கை வங்கி காரைநகர் கிளையில் இடம் பெற்ற போது இலங்கை வங்கியின் வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் S.சிவரட்னம் உதவி அரச அதிபர் R.T.ஜெயசீலன் உள்ளிட்ட பலர் விருந்தினராக கலந்துகொண்டனர்



## காரைநகரில் தனியான கல்விக் கோட்டம் அவசியம்

சுந்தரமூர்த்தி அதிபர் கோரிக்கை

காரைநகர் பிரதேசத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளையும் இணைத்து தனியான கல்விக் கோட்டம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலய அதிபர் சு.கணேசமூர்த்தி கோரிக்கை விடுத்துள்ளார்.

தீவக கல்வி வலயம் நடாத்திய கல்வித்தின விழா நவம்பர் மாதம் 9ம் திகதி காரைநகர் இந்துக் கல்லூரி நடராஜா மண்டபத்தில் இடம்பெற்ற போது அந் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கோரிக்கையை முன்வைத்தார்.

அதிபர் சு.கணேசமூர்த்தி தொடர்ந்து உரையாற்றும் போது காரைநகரில் தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவு, பிரதேச சபை, கமநல சேவை நிலையம் என்பன உருவாக்கப்பட்டமை போன்று தனியான கல்விக் கோட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

இன்று ஊர்காவற்றுறை கல்விக் கோட்டத்துடனேயே காரைநகரும் இணைத்திருக்கின்றது. இதனால் காரைநகர் பிரதேச பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் கோட்டத்திற்காக கடல் கடந்து செல்ல வேண்டி உள்ளது. இதனால் பல்வேறு சிரமங்களையும் பெருமளவு நேரத்தையும் செலவிட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுவதுடன் போட்டிகளில் பங்குபற்ற ஊர்காவற்றுறைக்கு மாணவர்களை அனுப்புவதற்கும் பெற்றோர்கள் பின்நிற்கின்றார்கள். எனவே காரைநருக்கு என தனியான கல்விக் கோட்டம் அமைப்பது அவசியம் என்றார்.

காரைநகரில் உள்ள எட்டுப் பாடசாலைகளும் இணைந்து நடாத்திய இந்த கல்வித்தின விழாவில் கல்வி அதிகாரிகள் பலர் கலந்து கொண்டதுடன் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.


## வலந்தலைச் சந்தியில் பஸ் தரிப்பிடம் இன்றி பயணிகள் சிரமம்

காரைநகர் வலந்தலைச் சந்தியில் நின்ற பாரிய வாகை மரம் நிஷா சூறாவளியினால் வேருடன் சாய்ந்ததால் பஸ்ஸிற்காக காத்து நிற்கும் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

வலந்தலைச் சந்தியில் பஸ்தரிப்பிடம் இன்மையால் பஸ்சேவைக்காக காத்திருக்கும் பயணிகளிற்கு இந்த நிழல் மரம் பேருதவியாக இருந்தது. தற்போது இந்த மரம் வீழ்ந்ததால் சுட்டெரிக்கும் வெய்யிலிலே பயணிகள் நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

காரைநகர் அபிவிருத்திச் சபையின் செயலாளராக இருந்த அமரர் ஜெ.தில்லையம்பலவாணர் வலந்தலைச் சந்தியில் பயணிகளுக்கான நிழல் குடை ஒன்று அமைக்க வேண்டும் என்று முயற்சிகளை மேற்கொணடவர். அவரது மறைவுடன் இந்த முயற்சியும் கைகூடவில்லை. அவரது மறைவின் பின்னர் காரைநகர் அபிவிருத்திச் சபை கல்வித்தின விழாவினை மட்டும் நடாத்தியதுடன் வேறு எந்த அபிவிருத்திப் பணிகளையும் இதுவரை முன்னெடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## காரைநகர் இந்துக் கல்லூரிக்கு புதிய அதிபர்



காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தின் புதிய அதிபராக ஆறுமுகம் குமரேசமூர்த்தி அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஒக்டோபர் மாதம் 3ம் திகதி அவர் தமது கடமைகளை வைபவரீதியாக பொறுப்பேற்றுக் கொண்டார். காரைநகர் வியாவில் சைவ வித்தியாலயத்தில் அதிபராக நீண்ட காலம் கடமையாற்றிய அவர் கல்வியிலும் நிர்வாகத்திலும் இரண்டு முது தத்துவமாணி பட்டங்களைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கல்லூரியின் அதிபராக கடமையாற்றிய சிறந்த ஆங்கில ஆசிரியரான கா.குமாரவேலு அவர்கள் ஓகஸ்ட் மாதம் ஓய்வு பெற்றதை அடுத்து ஆறுமுகம் குமரேசமூர்த்தி அவர்கள் அதிபராக பதவியேற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## சர்வதேச முதியோர் சிறுவர்தின விழா

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை நடத்திய சர்வதேச சிறுவர், முதியோர் தின விழா ஒக்டோபர் மாதம் 3ம் திகதி காரைநகர் சைவ மகா சபை மண்டபத்தில் நடை பெற்றது.

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் R.T.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவிற்கு முதன்மை விருந்தினராக யாழ் மாவட்ட மேலதிக நீதிவானும், ஊர்காவற்றுறை மாவட்டம் நீதவானமாகிய திருமதி ஜோய் மகிழ்மகாதேவன், யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக யா/கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலய பிரதி அதிபர் திருமதி A. ஸ்ரீஸ்கந்தராசா, யாழ்ற்றன் கல்லூரி அதிபர் ந. பரமசிவம் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இந்த விழாவில் கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக தெரிவு செய்யப்பட்ட முதியோர்கள் கௌரவிக்கப்பட்டதுடன்



மேற்படி நிகழ்வை ஒட்டி இடம்பெற்ற போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில் வழங்கலும் இடம்பெற்றது.

இவ்விழாவில் உரையாற்றிய மாவட்ட நீதிபதி ஜோய் மகிழ் மகாதேவன் தனது உரையில் முதியவர்கள் என்பவர்கள் எங்களைக் கட்டி எழுப்பிய விருட்சங்கள், வயது முதிர்ந்தவர்களின் ஆசீர்வாதம் என்பது இறைவன் வழங்கும் ஆசீர்வாதம் என்பது எனது கருத்து

எத்தனையோ முதியவர்கள் வயோதிபர் இல்லங்களில் வைத்துப் பராமரிக்கப்படுகின்றார்கள். ஆவர்கள் அங்கு அனைத்து வசதிகளோடு பராமரித்தாலும் கூட அவர்களுக்கு தங்களது பிள்ளைகள் அருகில் இல்லையே என்பது பெருங் குறையாகவே உள்ளது. பண வசதி உள்ள முதியவர்கள் தாம் ஏழையாக இருந்தாலும் பராவாயில்லை எங்கள் பிள்ளைகள் எமக்கருகில் இருந்து சேவை செய்ய வேண்டும் என ஆதங்கப்படுகின்றார்கள். நல்ல நோக்கத்திற்காக வெளிநாடு சென்றிருந்தாலும் வருடாந்தம் ஒரு தடவையாவது பிள்கைள் தங்களது பெற்றோர்களையோ



பேரன்மார்களையோ வந்து பார்த்து செல்ல வேண்டும். இதனால் அவர்களுடைய மனக்குறையை ஓரளவேனும் தீர்த்து வைக்கலாம் என்றார்.

## நற்போசன விழிப்புணர்வுக் கண்காட்சி


காரைநகர் பிரதேச சுகாதார பகுதியினார் நடாத்திய நற்போசன விழிப்புணர்வு கண்காட்சி ஓகஸ்ட் மாதம் 20ம் திகதி காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை மண்டபத்தில் இடம் பெற்றது.



திருமதி க. விக்கினேஸ்வரி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் Dr.M.கேதீஸ்வரன் கலந்து கொண்டதுடன் சிறப்பு விருந்தினர்களாக ஊர்காவற்றுறை பதில் சுகாதார வைத்தியர் Dr. M. புண்ணியமூர்த்தி, காரைநகர் பிரதேச வைத்திய சாலை பொறுப்பதிகாரி Dr.R.சுவாமிநாதன், காரைநகர் ஆயுள்வேத மத்திய மருந்தக வைத்தியர் Dr.கி.சிறில் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## தபால் அதிபர் சண்முகரட்ணம் ஓய்வுபெற்றார்

காரைநகர் தபாலகத்தில் தபாலதிபராக கடமையாற்றிவந்த சபாரத்தினம் சண்முகரத்தினம் செப்ரம்பர் மாதம் 25ம் திகதி முதல் ஓய்வு பெற்றுள்ளார்.

காரைநகர் நீலிப்பந்தணையை சேர்ந்த ஆறுமுகம் சபாரத்தினம் தங்கரத்தினம் தம்பதியினரது நான்காவது புதல்வாரன இவர் 1988இல் தபாலக சேவையில் இணைந்து கொண்டார். 1994 இல் நடைபெற்ற தபாலதிபர் பரீட்சையில் சித்தியடைந்து 1995 முதல் மூதூர் தபாலகத்தில் உதவி தபாலதிபராகவும், தபாலதிபராகவும் கடமையாற்றிய பின் 1998 முதல் காரைநகர் தபாலகத்தின் பிரதம தபாலதிபராக கடமையை பொறுப்பேற்றார். கடந்த பத்து வருடங்களாக இங்கு சிறப்பான சேவையாற்றிய காலத்தில்

தபாலகம் புனரமைக்கப்பட்டு நவீன வசதிகளுடன் இங்கி வந்ததுடன் தொலைபேசி சேவை, பக்ஸ் வசதி என்பனவும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


## காரைநகர் வைத்தியசாலைக்கு பற்சிகிச்சை உபகரணம்

காரைநகர் அரசின் வைத்தியசாலைக்கு பற்சிகிச்சை உபகரணத் தொகுதி அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

கனடாவில் வசிக்கும் காரைநகர் வாசியான தம்பிராசா விஸ்வலிங்கம் அவர்கள் சுமார் 2 இலட்சம் ரூபா பெறுமதியான உபகரண தொகுதியை வைத்தியசாலைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இந்த உபகரணத் தொகுதி கையளிக்கும் நிகழ்வு செப்ரம்பர் மாதம் 2ம் திகதி காரைநகர் வைத்திய சாலையில் இடம்பெற்றது.

காரைநகர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி க.சுவாமிநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் Dr.M.கேதீஸ்வரன், புற்றுநோய் வைத்திய நிபுனர் Dr.ந.ஜெயக்குமார், காரைநகர் வைத்தியசாலை பல் வைத்திய நிபுனர் Dr.S.அகிலன் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் R.T.ஜெயசீலன் மற்றும் காரைநகர் அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





## பட்டு மாமா ஞாபகார்த்த கல்வி ஊக்குவிப்புப் போட்டி

காரைநகர் பிரதேச பாடசாலை மாணவர்களிடையே வாரிவளவு நல்லியக்கச்சபை செயலாளர் அமரர் சரவணமுத்து பத்மநாதன் (பட்டு மாமா) ஞாபகார்த்த மாதாந்த கல்வி ஊக்குவிப்பு போட்டிகள் மாதாந்தம் காரைநகர் சைவமகா சபை மண்டபத்தில் முன்பள்ளி இணைப்பாளர் செல்வி ச.சுமதி தலைமையில் இடம் பெற்றது. இந்த போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு அவரது குடும்பத்தினரால் ஊக்குவிப்பு பரிசில்கள் வழங்கப்பட்டன.

மார்ச் மாதம் தேவாரப் போட்டியும், ஏப்பிரல் மாதம் ஆத்திசூடிப் போட்டியும், மே மாதம் திருக்குறள் போட்டியும், யூன் மாதம் கொன்றை வேந்தன் போட்டியும் செப்ரம்பர் மாதம் பேச்சுப் போட்டியும், நவம்பர் மாதம் கணித எண் கணக்குப் போட்டியும் இடம் பெற்றது.

## குழந்தைகள் தினம்

காரைநகர் பிரதேச குழந்தைகள் தினம் நவம்பர் மாதம் 24ம் திகதி யாழ்ற்றன் கல்லூரி மண்டபத்தில் முன்பள்ளி ஒருங்கிணைப்பாளர் செல்வி S. சுமதி தலைமையில் நடைபெற்றது. காரைநகரில் உள்ள முன்பள்ளிகளின் குழந்தைகள் கலந்து கொண்டதுடன் முன்பள்ளி குழந்தைகளின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## காரைநகர் பிரதேச சபைக்கு புதிய கட்டடம்

காரைநகர் பிரதேச சபைக்கு 2 கோடி ரூபா செலவில் புதிய கட்டடம் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது இந்தக்கட்டடத்திற்கான அடிக்கல்லை வட மகாண உள்ளூராட்சி ஆணையாளர் கு.ஜோன்சன் நாட்டி வைத்தார்

காரைநகர் இந்துக் கல்லூரிக்கு முன்பாக உள்ள காணி காரைநகர் பிரதேச சபையினால் கொள்வனவு செய்யப்பட்டு கடைத்தொகுதிகள் அடங்கிய இருமாடிக் கட்டடம் அமைக்கும் பணி இடம் பெற்றது.





## காரைநகர் அபிவிருத்திச் சபையின் புதிய செயலாளராக பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை

காரைநகர் அபிவிருத்திச் சபையின் புதிய செயலாளராக காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலய முன்னாள் அதிபரும் காரைநகர் மணிவாசக சபையின் தலைவருமான பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார்.

காரைநகர் அபிவிருத்திச் சபையின் செயலாளராக நீண்ட காலம் கடமையாற்றி காரைநகரில் பல்வேறு அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்த ஜெ.தில்லையம் பலவாணர் அண்மையில் காலமானதை அடுத்து அபிவிருத்திச் சபையின் செயலாளராக டாக்டர் சு.நடராசா நியமிக்கப்பட்டார். அவர் தற்போது வெளியூர் சென்றிருப்பதால் அவரின் இடத்திற்கே புதிய செயலாளராக பண்டிதர் மு.சு.வேலாயுத பிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார்.

சபையின் தலைமைப் பொறுப்பை வகித்து வந்த புலவர் வே. குமாரசாமி தான் சுகயீனம் உற்றிருப்பதால் தலைவர் பதவியை இராஜீனாமா செய்வதாக சபைக்கு அறிவித்ததை அடுத்து அதன் புதிய தலைவராக உப தலைவராக செயற்பட்டு வந்த யாழ்ற்றன் கல்லூரி அதிபர் ந.பரமசிவம் நியமிக்கப்பட்டுள்ளதுடன் அவருடைய இடத்திற்கு காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் கடமையாற்றி அண்மையில் ஓய்வு பெற்ற கா.குமாரவேலு உபதலைவராக பதவி ஏற்றுள்ளார்.

இந்த நியமனங்கள் அனைத்தும் கடந்த வாரம் காரைநகர் அபிவிருத்திச் சபையின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் இடம்பெற்ற நிர்வாக சபை கூட்டத்தில் ஏகமனதாக மேற்கொள்ளப்பட்டதாக புதிய செயலாளராக பொறுப்பேற்ற பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை தெரிவித்தார்.

**காரைநகர் பயிரிக்கூடல் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவிலில் இடம்பெற்ற சூரன்போர் உற்சவம்.**



## துரித கதியில் இடம்பெற்ற முதற்கட்ட திருப்பணிகள்


காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் துரித கதியில் இடம்பெற்ற முதற்கட்ட திருப்பணி வேலைகளை அடுத்து டிசெம்பர் மாதம் 30ம் திகதி ஐயனார் சிவன் அம்பாள் ஆகிய மூலமூர்த்திகளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் பிராயச்சித்த அபிஷேகம் இடம்பெற்றது.

சரித்திர பிரசித்தி பெற்ற ஈழத்துச் சிதம்பரத்தில் நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட மிகவும் பழுதடைந்திருந்த சுற்று மண்டபங்கள் மீண்டும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு உட்பிரவாகச் சுவர்களில் இந்தியாவில் இருந்து வரவழைக்கப்பட்ட சிற்ப கலைஞர்களினால் நடராஜப் பெருமானின் 108 தாண்டவங்களும் சிற்ப வேலைப்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டதுடன் அம்பாள் ஐயனார் ஆகியோருக்கான மொட்டைக் கோபுரங்களும் வெள்ளைக் கற்கள் பொறித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அமைக்கப்பட்ட நிலையில் டிசெம்பர் மாதம் 3ம் திகதி அபிஷேக ஆராதனைகள் இடம் பெற்றமை குறிப்பிடத் தக்கது.








www.karainews.com



மணிவாசகர் சபை நடாத்திய சைவ சமய போட்டிகளில் காரைநகர் பாடசாலை மாணவர்கள் 1200க்கும்மேற்பட்டோர் கலந்து கொண்டனர். போட்டிகளில் கலந்துகொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினரை காணலாம்.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2 ஆண்டுகள் பூர்த்தி!

"எனது ஊர் காரைநகர்" காலாண்டு சஞ்சிகை ஆரம்பிக்கப்பட்டு இவ்விதழோடு இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ளன. கனடா வாழ் காரைநகர் மக்களிற்கும் காரை மண்ணிற்கும் பாலமாக இருந்து, நீண்ட நெடிய தூரங்களை கடந்து ஓரளவேனும் நெருக்கமாக கொண்டு வந்துள்ளோம் என நம்பிக்கை கொள்கின்றோம்.

காரைநகரில் இருந்து ஒரு தொகுப்பாளரும், கனடாவில் இருந்து ஒரு தொகுப்பாளருமாக இருவரினதும் தனிப்பட்ட சொந்த முயற்சியின் பயனாக இச்சஞ்சிகை வெளிவருகின்றது. இச்சஞ்சிகையை தடங்கல் இன்றியும் கிரமாகவும் எடுத்து வர காரைநகர் உத்தியோகத்தர்களும், வர்த்தகர்களும் தரும் ஆதரவு இருக்கும் வரை தொகுப்பாளர்களும் பின்னிற்கப்போவதில்லை.

செய்திகளை மட்டும் பரிமாற்றிக் கொள்வதோடு இச்சஞ்சிகையின் பணி நின்றுவிடவில்லை. கடந்த இரண்டு ஆண்டுகளில் காரை மண்ணில் கனடிய காரை மக்களின் பணம் நேரடியாகவும் உடனடியாகவும் சென்று எமது மண் பயன் பெற்றுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 10 ஆயிரம் டொலர் (10 இலட்சம் ரூபாய்கள்) பின்வரும் செயற்பாடுகளிற்காக காரைநகர் மண்ணிற்கு சென்றடைந்துள்ளது.

காரைநகர் இந்துக் கல்லூரியில் நிறைவு பெற்ற ஆண்கள் மலசல கூடம்: 3 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய்கள்(மிகுதி கையிருப்பு 60 ஆயிரம் ரூபாய்கள்)

நீலிப்பந்தனை கேணி, நீலிப்பந்தனை கோயில் மின்சார இணைப்பு புனரமைப்பு மற்றும் நித்திய பூசை நிதி: 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்கள்.

சிவன் கோயில், வாரிவளவு பிள்ளையார் கோயில், மணிவாசகர் மடாலயம் என்பவற்றிற்கு தனியார் விருப்பத்தின் பேரில் பெறப்பட்டு அனுப்பப்பட்ட மொத்த தொகை: 60 ஆயிரம் ரூபாய்கள்.

மணிவாசகர் விழா அனுசரணை: 50 ஆயிரம் ரூபாய்கள்.

கனடா காரை கலாச்சார மன்றத்திற்கான கணனிகள் விற்று சேர்ந்த பணம்: 750 டொலர்

கணனிகள் விற்று யாழ்ற்றன் கல்லூரி நூல்நிலைய நிதிக்கு இதுவரை சேர்ந்த பணம்: 2000 டொலர்

இக்காலாண்டு சஞ்சிகையின் உடனடி செய்தி சேவையாக இணையத்தளத்தில் உடனுக்குடன் காரைநகர் செய்திகளும், படங்களும் விளக்கமாகவும் விபரமாகவும் வெளிவருகின்றன. அத்துடன் எமது பணிகள் தொடர்பான வரவு, செலவுகளும் உடனுக்குடன் சதக்கணக்குகளுடன் பிரசுரமாகின்றது.


உடனுக்குடன் செய்திகளை பார்வையிட www.karai News.com என்ற இணையத்தள முகவரிக்கு தவறாது சென்று பார்வையிடவும்.


### லண்டன் இளைஞர்கள் நிதியுதவி

"எனது ஊர் காரைநகர்" காலாண்டு சஞ்சிகை சார்பில் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்தில் முன்னெடுக்கப்பட்டு வந்த சுகாதாரமான கழிப்பிட மேம்பாட்டுத் திட்டத்தின் ஆண்கள் பகுதி 3 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய்கள் செலவில் நிறைவு பெற்றுள்ளது.

அதனைத் தொடர்ந்து பெண்கள் பகுதி மேம்பாட்டு திட்டத்திற்கு லண்டனில் இருந்து காரை இளைஞர்கள் 61 ஆயிரம் ரூபாய்களை அனுப்பி வைத்துள்ளனர். அடுத்த கட்ட பணிகளை முன்னெடுத்து செல்ல கனடா வாழ் காரை மக்களும், இக்கல்லூரியின் பழைய மாணவர்களும் நிதிசேகரிப்பிற்காக நடாத்தப்படும் நிகழ்வுகளிற்கு ஆதரவு தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

காரைநகர் இந்துக் கல்லூரி பழைய மாணவர்கள் இக்கல்லூரியின் முன்னேற்றத்திற்கு உதவ அந்தந்த நாடுகளில் இயங்கும் காரை மக்கள் மன்றங்களின் ஊடாக முன்வரவேண்டும். அதன் மூலம் இடம்பெயர்ந்த நாடுகளில் காரை மக்கள் ஒற்றுமை கட்டிக் காப்பதுடன் பாடசாலையின்





முன்னேற்றத்திற்கு வழிசமைத்தவர்களாவார்கள் என்பது உறுதி.

### நீலிப்பந்தனை பிரதேச மக்கள் கவனத்திற்கு:

நீலிப்பந்தனை பிரதேச வளர்ச்சிக்காக இப்பகுதி கனடா வாழ் மக்கள் பலரிமும் தொடர்பு கொண்ட போது அசட்டையீனமாகவும், வசதியீனம் இன்மையினாலும் 20 டொலர் கூட வளங்க முடியாத நிலையில் இப்பகுதி மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வாழ்ந்து வருவது கவலைக்கீடான நிலமையை எடுத்துக் காட்டுகின்றது.

காலங்காலமாக கவனிப்பாரற்றிருந்த நீலிப்பந்தனை கேணி, மற்றும் நீலிப்பந்தனை துர்க்கை அம்மன் கோயில் நிரந்தர பூசை நிதியத்திற்கு இதுவரை உதவி புரிந்தோர் விபரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| மாதவன், அமுதா | - | 100.00 |
| சுப்பிரமணியம்பிள்ளை, மனோகௌரி | | 100.00 |
| கரன், சாயி | - | 100.00 |
| பஞ்சலிங்கம் கந்தையா | - | 100.00 |
| சிவகுமாரன் கனகசுந்தரம் | - | 50.00 |
| நற்குணம் பாலேந்திரன் | - | 50.00 |
| குஞ்சிதபாதம் நாகலிங்கம் | - | 50.00 |
| தீசன் திரவியநாதன் | - | 20.00 |
| ஆனந்தமலர் பாலச்சந்திரன் | - | 250.00 |
| நடராஜா தயாபரன் | - | 650.00 |
| மகாதேவன் பாலசுப்பிரமணியம் | - | 100.00 |

"எனது ஊர் காரைநகர்" இப்பகுதி மேம்பாட்டிற்காக எப்போதும் முன்னின்று உழைக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனாலும் இப்பகுதி மக்கள் தங்களால் இயன்ற உதவிகளை வளங்க முன்வர வேண்டும்.

நீலிப்பந்தனை கேணி புனரமைப்பு இன்னமும் முற்றுப் பெறாத நிலையிலும், கடந்த புயல் காற்றினால் கட்டப்பட்ட சில பகுதி, கண்டல் மண் இடப்பட்டு பலப்படுத்தப்படாத காரணத்தினால் சேதமாகி உள்ளது.



மழை வெள்ளம் காரணமாக மலசல கூடங்கள் நிரம்பி வழிந்து அவற்றில் இருந்து வெளியேறிய கழிவுகளும் கலந்து வெள்ளத்துடன் இக்கேணியில் காலங்காலமாக சங்கமம் ஆவது உண்டு. இந்த நிலமையை உணர்ந்து, சுகாதார நிலையை பேணவும், நீண்ட கால நன்னீர் பயனை பெறவும் இப்பகுதி ஊர் மக்கள் இக்கேணியை பாதுகாக்க முன்வரவேண்டும்.

தனிப்பட்ட காரணங்களை முன்னிறுத்தியும், வெள்ள நீர் அசௌகரியங்களை போக்கவும் இப்பகுதி மக்கள் அடுத்தவரை குறை சொல்வதையும், பிரதேச சபை வீதிகளை செப்பனிடவில்லை என்பதை காலங்காலமாக சொல்வதையும் தவிர்த்து தமாக உதவ முன்வரவேண்டும். உரிய முறையில் பிரதேச சபை உத்தியோகத்தர்களிற்கோ உரியவர்களிற்கோ காரைநகர் வாழ் இப்பகுதி மக்கள் இக்குறையை மீண்டும் மீண்டும் எடுத்துச் செல்ல வேண்டும்.

## கல்வித் தினம்





தீவக கல்விவலயம் காரைநகரில் உள்ள 8 பாடசாலைகளையும் இணைத்து நடாத்திய கல்வித்தின விழாவில் பேராசிரியர் வே.தர்மரட்ணம், கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலய அதிபர் ஆ.குமரேசமூர்த்தி ஆகியோர் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பிப்பதையும், கல்லூரி அதிபர், ஊர்காவற்றுறை கோட்டக்கல்வி அதிகாரி S.பாஸ்கரன் ஆகியோர் உரையாற்றுவதையும் மாணவர்களின் கலை நிகழ்வுகளையும் பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்ட காரைநகர் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம். இந்த நிகழ்வுகள் இந்துக் கல்லூரி நடராஜா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது.

## Palmyra வானொலி உத்தியோகபூர்வ வெளியீடு

மணியின் Palmyra வானொலி பெட்டிகள் தைப்பொங்கல் தினம் முதல் றொறன்ரோவில்அபிமான வர்த்தகநிலையங்களில் உத்தியோகபூர்வமாக வெளியிட்டு வைக்கப்படுகின்றன. உங்கள் வீடுகளில் நினைத்த நேரத்தில் உலகெங்கிலும் உள்ள அனைத்து தமிழ் வானொலி நிகழ்ச்சிகளைகேட்டு மகிழ மணியின் Palmyra வானொலி பெட்டிகளை கேட்டு பெற்றுக் கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விக் கண்காட்சி

யாழ்ற்ரன் கல்லூாயில் கடந்த மாதம் நடைபெற்ற கல்வி கண்காட்சியில் எடுக்கப்பட்ட படங்கள் கண்காட்சியை ஊர்காவற்துறை கோட்டக்கல்வி அதிகாரி S.பாஸ்கரன் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்





## பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கம்

காரை நலன் புரிச் சங்கம் பிரான்ஸ் அமைப்பு மிகக் குறுகிய காலத்தில் பிரான்ஸ் வாழ் காரை மக்களின் பெரும் வரவேற்பைப் பெற்று வளர்ச்சி கண்டு வருகின்றது.

இவ்வமைப்பு ஆரம்பிக்கப்பட்டு மிகக்குறுகிய காலமானாலும் காரை மண்ணின் தேவையறிந்து உதவி வருவதும், ஊர் பற்றும் தமிழ் பற்றும் உள்ளவர்கள் பலரும் இம்மன்றத்தின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கமானது ஜனவரி 2009 முதல் உத்தியோகபூர்வமாக இணையத்தளம் ஒன்றினையும் ஆரம்பித்து காரை மக்களின் தகவல் பரிமாற்றத்திற்கு மற்றுமோர் காரணியாக சிறப்பு பெறுகின்றது. இணையத்தளத்தினை www.karainagar.eu என்ற முகவரியில் அனைவரும் பார்வையிடலாம்.

### அனைவருக்கும் இலவசம்

உங்கள் கைகளில் தவழும் இந்த சஞ்சிகை உங்களைப்போலவே அனைவருக்கும் இலவசமாக வீடுகளிற்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. காரை மக்கள் தங்கள் பெயரை அழைத்து அல்லது ஈமெயில் மூலம் தொடர்பு கொண்டு அறியத்தந்தால் அவர்களிற்கும் முற்றிலும் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.
"எனது ஊர் காரைநகர்" தொடர்புகளுக்கு

416 821 8390 அல்லது
theesan@karainews.com
331 Trudelle Street. Unit 34
Scarborough, Ont.
M1J 3J9

காலாண்டுக்கு ஒரு முறை
காரைநகர் சென்று வருவோம்

**அடுத்த இதழில்**
**தில்லை அங்கும் இங்கும்**
அ.நமசிவாயம்பிள்ளை ஆசிரியர் அவர்கள்

அடுத்த இதழ் ஏப்ரல் மாதம்
முதல் வாரத்தில் வெளியாகும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவாசகர் விழா

காரைநகர் மணிவாசகர் சபை, காரைநகர் மாணவர்களுக்கு இடையே நடாத்திய சைவசமயப் பாடப் பரீட்சைகளில் அதிஉயர் புள்ளிகளைப்பெற்ற 5 மாணவர்களிற்கு தங்கப்பதக்கம் வழங்கப்பட்டது. தங்கப்பதக்கம் பெற்ற மாணவர்கள் வருமாறு.

செல்வி பா.சிவராகினி(தரம் 2 கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி)

உ.குகதர்சன்(தரம் 4, சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலயம்)

செல்வி கு.அமுதா(தரம் 6 கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி)

செல்வி ஞா.கலைச்செல்வி(தரம் 8, யாழ்ற்ரன் கல்லூரி)

செல்வி செ.ஹேமாவதி(தரம் 11, யாழ்ற்ரன் கல்லூரி)

அத்துடன் தரம் 2 முதல் தரம் 11 வரை உள்ள ஒவ்வொரு பிரிவுகளிற்கும் பேச்சுப்போட்டி,மனனப்போட்டி, பண்ணிசைப்போட்டி என்பவற்றில் பங்குபற்றிய மாணவர்களில் முதல் மூன்று இடங்களைப்பெற்ற மாணவர்களிற்கு பெறுமதிமிக்க பரிசில்களும் வழங்கி ஊக்குவிக்கப்பட்டது.

மணிவாசகர் சபையினரின் இவ்வருட விழா கனடாவில் இருந்து வெளியாகும் இச்சஞ்சிகையின் ஆதரவுடனும் கனடா காரை கலாச்சார மன்றத்தின் ஆதரவுடனும் வெகு சிறப்பாக இடம்பெற்றது. இவ்விழாவிற்கு அமரர் திருமதி ஞானாம்பிகை திரவியநாதன் ஞாபகர்த்த மூன்று தங்கப்பதக்கங்களும், மதுரா ஜுவலர்ஸ் மற்றும்

முதல் நாள் மணிவாசகர் விழாவிற்கு நல்லை ஆதின முதல்வர் அவர்களும், இரண்டாம் நாள் நிகழ்விற்கு வலிகாம வலக கல்வி பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் அவர்களும் மூன்றாம் நாள் விழாவிற்கு காரை உதவி அரசாங்க அதிபர் அவர்களும் இறுதிநாள் நிகழ்விற்கு மணிவாசகர் சபைத் தலைவர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை அவர்களும் தலைமைதாங்கி விழாவை நடாத்திவைத்தனர். விழாவிற்கு சைவசமய பெரியவர்கள் விருந்தினர்களாக அழைக்கப்பட்டு சொற்பொழிவுகளும் சிறப்பு நிகழ்சிகளும் நடைபெற்றன.

இந்நிகழ்ச்சிகளின் புகைப்படங்கள் மற்றும் மேலதிக விபரங்கள் "எனது ஊர் காரைநகர்" இணையத்தளத்தில் அனைத்தும் கலர் வண்ணப்புகைப்படங்களுடன் வெளியாகியுள்ளன.

பார்வையிடுவதற்கு www.karaiNews.com என்ற














மேலதிக படங்கள் www.karainews.com என்ற இணையத்தள முகவரியில் பார்வையிடாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகரையும் கலக்கிய நிஷா


















மேலதிக படங்கள் www.karainews.com என்ற இணையத்தள முகவரியில் சென்று பார்வையிடலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HomeLife/Future Realty Inc.,

Brokerage*



**BRAND NEW**
**Gas Station***
**Close To GTA**
**ASKING 2.5 - 3.5 MILLION**



**$219,000**
Chemong Rd/Park Hill Rd
4 Bedrooms,
2 Washrooms



**$384,800**
Markham Rd, / Steeles
4 Bedrooms,
3 Washrooms



**$389,000**
Markham Rd / 16th Ave
4 Bedrooms
3 Washrooms



**$199,900**
Morningside / Lawrance
3 Bedrooms
2 Washrooms



**$379,000**
Markham Rd / Elson
4 Bedrooms
3 Washrooms



**RAJ NADARAJAH**
*Sales Representative*
வீடு வாங்க விற்க
இலவச ஆலோசனைகளுக்கு

**Direct : 416-333-611**
Office: (905)-201-9977
FAX: (905)-201-9229
E-mail: nanohomes@gmail.com
7 Eastvale Dr., Unit 205, Markham, ON, L3S 4N8
*Independently Owned and Operated, REALTOR®

**McCowan / Sheppard**
**Business Units For Sale**

15 YEARS Computer
Mz;Lfs; jkpoh;fspd; Nguhjuitg; ngw;w
**NaNo Computer**



# KAJANTH Grocery

***Video - Vegetable - Money Transfer, Meat***

துரித பணமாற்றுச் சேவை,
உலர் உணவுப் பொருட்கள்,
உடன் மரக்கறி,
ஆட்டு இறைச்சி,
கணவாய்,
இறால், மீன் ...
இன்னும் பல

*தமிழ்ப் படங்கள்*
*ஓடியோக்கள், சீடிக்கள்*
*மற்றும் வீடியோ பிரதிமாற்றம்*

S&Rentals of
Tamil Movies
Audios & CD's
Video Transfer
from any Systems



*Kumar*
**Tel: 416 240 0039**

**1708 Jane St. Weston, Ont. M9N 2S4**
**(Jane & Lawrence)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## Dr. V. Vijayaratnam M.D

M.R.C.P(U.K) M.R.C.P.C.H., F.R.C.P (C),
F.A.A.P, D.C.H (LONDON), D.C.C.H (EDIN.)
PAEDIATRICS, GASTROENTEROLOGY AND NUTRITION

3430 Finch Ave.E., Unit #6A
Scarborough, On. M1W 2R5
Tel: 416 496 1990 Fax: 416 496 1984

600 Sherbourne Stree, Suite # 711
Toronto, On. M4X 1W4
Tel: 416 929 0929 Fax: 416 929 8084

**416 496 1990 416 929 0929**

Cash Point® The Buck Starts Here!

**CHEQUECASHING**
**MORTGAGES**
**WORLDWIDE MONEY TRANSFER**

**416.284.7000**

காசோலை மாற்றல் **Foreign Currency Exchange**

G03-3852 Finch Ave.E, Scarborough, ON. M1T 3T9




## FINANCIAL SERVICES

- RESIDENTIAL MORTGAGES
- REFINANCING
- COMMERCIAL MORTGAGES
- BUSINESS LOANS
- REAL ESTATE NEEDS
- BUY & SELL HOMES & BUSINESSES

**416.284.0005**

202-3852 Finch Ave. E, Scarborough, ON. M1T 3T9



## DOUBLE SEAL INSULATING GLASS LTD

**453 Signet Drive, North York, ON, M9L 1V5**

**Residential, Commercial and High Performance**



Contact: **Mahadevan Balsubramaniam**

**Tel: 416 742 0146 Ext. 224**

**Cell: 416 716 7052**
**Fax: 416 742 4593**

**www.doubleseal.ca**

Graphic Land - 416 412 0900

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org